1581

KANNAGI

(Silambal Vilaintha Kathai.)

OFFICE OF THE REGISTRAR
22 MAR 1929

BY

C. S. RAJAH PILLAI,

Lecturer in Tamil, Voorhees College.

Moral Lecturer in Central Jail,

VELLORE.

Published by

B. Thiruvengada Ranganatham & Co.,

Long Bazaar, Vellore.

1929

[*Price 6 Annas.*

0,1C92:9
N29

கண்ணகி

(சிலம்பால் விளைந்த கதை)

OFFICE OF THE REG... 22 MAR 1929 MADRAS

வேலூர்

வூர்ஹீஸ் காலேஜ், தலைமைத் தமிழ்ப்பண்டிதரும்

சென்ட்றல் சிறைச்சாலை உபந்நியாசகரும்

ஆகிய

C. S. இராஜாப் பிள்ளை, எழுதியது

வேலூர்

பா. திருவேங்கட ரங்கநாதம் கம்பெனியார்

வெளியிட்டது.

1929

ரிஜிஸ்தர் செய்தது] [விலை அணா 6.

77029

முன்னுரை.

நமது செந்தமிழ் நாட்டுப் பண்டைத் தமிழ் நூல்கள் சொற் சுவை, பொருட் சுவை மிகுந்த செய்யுள் வடிவமாக எழுதப்பட்டிருக்கின்றனவென்பது அறிஞர் பலருமறிந்ததே;

அவற்றுள் சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய சங்க நூல்கள் படிப்பதற்கு மிக்க இன்பத்தை விளைப்பன என்பதும் உலகம் ஒப்புக்கொள்ளக் கூடியதே;

இந்நூல்களின் கதையைச் சுருக்கமாக எளிய தமிழ் நடையில் எழுதி நமது மாணவர்களுக்குக் கற்பித்தால், அவர்கள் அந்நூல்களின் அருமை யுணர்ந்து, தகுதியடைந்த காலை அந்நூல்களைப் படித்துணர்வார்கள் என்ற நம்பிக்கையாலும், எல்லாம் வல்ல இறைவன் திருவருட்டுணையாலும் சிலப்பதிகாரக் கதையைச் சிறு வசன நூலாகக் "கண்ணகி" யென்னும் பெயர் புனைந்து எழுதினேன். இந்நகர்த் திருவேங்கட ரங்கநாதம் கம்பெனியார் அன்போடு ஏற்றுக்கொண்டு அச்சிட்டு வெளிப்படுத்தியிருக்கின்றார்கள்; அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக; கல்வித்துறைப் பெரியோர்கள் இதனை ஆதரித்து எங்களை ஊக்கமுறும்படி செய்யப் பணிந்துவேண்டுகின்றேன்.

இங்ஙனம்,

C. S. இராஜாப் பிள்ளை,

தலைமைத் தமிழ்ப் பண்டிதன்

ஊர்ஹில்ஸ் காலேஜ்

வேலூர்,
25-2 29.

OFFICE OF THE REGISTRAR
22 MAR 1929
MADRAS

பொருளடக்கம்

எண்	புகார்க்காண்டம்	பக்கம்
1.	புகார்ச்சிறப்பு ...	1
2.	கண்ணகி திருமணம் ...	3
3.	மாதவியும் கோவலனும் ...	4
4.	கண்ணகி பிரிவு ...	6
5.	இந்திரவிழா ...	7
6.	கண்ணகி கனாத்திற முரைத்தது ...	8
7.	கோவலனும் கண்ணகியும் ...	12
8.	நகர்கடந்து செல்லுதல் ...	13

மதுரைக்காண்டம்

1.	கண்ணகியும் கோவலனும் காட்டுவழிச் சேறல் ...	19
2.	ஐயை கோட்டம் ...	25
3.	கோவலனும் கௌசிகனும் ...	28
4.	புறஞ்சேரியில் தங்கிய வரலாறு ...	32
5.	கோவலன் மதுரை சென்று மீளல் ...	34
6.	மாடலனும் கோவலனும் ...	35
7.	கவுந்தியடிகள் மாதரியிடங் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்தல் ...	38
8.	ஆய்ச்சியர் குரவை ...	47
9.	கண்ணகி துயரம் ...	49
10.	கண்ணகி கோவலனைக்காணல் ...	51
11.	கண்ணகி மன்னனைக்கண்டு வழக்குரைத்தல் ...	54
12.	கண்ணகி வஞ்சின மாலைத்தது ...	57
13.	மதுரை எரியால் அழிதல் ...	60
14.	மதுராபதித்தெய்வம் கண்ணகிக்கு உற்றதுரைத்தல் ...	61

எண்	வஞ்சிக்காண்டம்		பக்கம்

1.	கண்ணகி கணவனைக்கண்டு விண்ணுலகம்போதல்	...	65
2.	சேரன் செங்குட்டுவன் மலைவளங்காணச் செங்குன்றடைதல்	...	68
3.	சேரன் வஞ்சின முரைத்தல்	...	72
4.	சேரன் நீலகிரியடைந்து தங்குதல்	...	73
5.	சேரன் வடநாடு செல்லல்	...	75
6.	மாடலன் செங்குட்டுவனைக் காணல்	...	76
7.	சேரன் வஞ்சி நகரடைதல்	...	78
8.	தேவந்தி கண்ணகி கோயிலடைதல்	...	80
9.	தேவந்தி ஆவேசமுறுதல்	...	81
10.	இளங்கோவடிகள் வரலாறுரைத்தல்	...	83
11.	மற்றைய வேந்தரும் மாபத்தினியைப் போற்றல்	...	83

கண்ணகி

1, புகார்ச் சிறப்பு

ஏரியு மேற்றத்தி னானும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாந்—தேரின்
அரிகாலின் கீழுகூஉ மந்நெல்லே—சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு

வான் பொய்ப்பினுந்தான் பொய்யா மலைத்தலைய கடற் காவிரி புனல்பரந்து பொன் கொழித்தலால் நீர்வளம், நிலவளம் குடிவளம், கோல்வள முதலிய எல்லா வளங்களும் ஒருங்கமையப்பெற்று நிலைகட்குத் திருமுகம்போல் விளங்குவது சோழவள நாடாகும்; "மேதக்க சோழவளநாடு சோறுடைத்து" என்ற பெரியார் மொழியும் இந்நாட்டின் பெருமையை நன்கு விளக்கும். இச்சோழவளநாட்டிற் காவிரிநதி கடலொடு கலக்குந் துறைமுகமுடையதும் சோழமன்னர்களுக்கு வழிவழியாகத் தலைநகரமாய் விளங்குவதும் பத்தினிப் பெண்டிர்பலர் உறையப் பெற்றதுமாகிய காவிரிப்பூம்பட்டினம் என்னும் பெயருடைய அழகமைந்த நகரம் ஒன்றுள்ளது.

இந்நகரம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என்னும் இரண்டு பிரிவினை யுடையது. இந்நகரத்தில் அந்தணர் வீதியும், அரசர் வீதியும், வைசியர் வீதியும், வேளாளர் வீதியும், அணியணியாகத் திகழும். இவ்வீதிகளைச் சூழ்ந்து நாற்புறங்

களினும் தேரோடும் வீதியும், குதிரைகளைப்பழக்கும் வையாளி வீதியும், நகரினைக்காக்கும் யவனர் வீதிகளும், பலநாட்டுமக்களும் ஒருகுடிப்பிறந்த மக்கள்போற் கலந்த அன்புடையராய் வாழும் பல வீதிகளும், சிறந்து தோன்றும். இன்னும் நெல், பயறு, உளுந்து, துவரை முதலிய கூலங்களை மலையளவாகக் குவித்துக்கிடக்குங் கூலவாணிகர் வீதிகளும், முத்து, பவளம் முதலிய நவமணிகளையும் விற்கும் இரத்தின வியாபாரிகளின் எழில்மிகு வீதிகளும், பொன் முதலிய ஐந்து உலோகங்களை யுங்கொண்டு பணிசெய்கின்ற கம்மாளர் வீதிகளும் எலிமயிரா லும், பருத்தியாலும் கம்பளமும், நுண்ணிய ஆடைகளும் நெய்கின்ற சாலியர் வீதிகளும், இசைவளம்பெற இனிதாகப் பாடும் பாணர் வீதிகளும், வளம் பெறநிலவும். முன்னர்க் கூறியபட்டினப்பாக்கத்திற்கும் மருவூர்ப்பாக்கத்திற்கும் இடையில், பல சிறு கடைகளையுடைய நாளங்காடி என்னும் ஓர் இடம் உளது. அவ்விடத்தில் நாளங்காடிப்பூதத்தின் பீடமும், முத்துப்பந்தர், தோரணவாயில் பட்டிமண்டபம் முதலிய காட்சி நிலையங்களும், நெடுங்கல் நின்றமன்றம், பூதசதுக்கம், வெள்ளிடை மன்றம், இலஞ்சிமன்றம், பாவைமன்றம் என்னும் ஐவகை மன்றங்களும், சிறந்து விளங்கும். நாளங்காடிப்பூதம் தேவேந்திரனால் முசுகுந்தச் சக்கரவர்த்திக்குத் துணையாகக் கொடுக்கப்பட்டது; அவன் அப்பூதத்தை இவ்விடத்தில் நிறுத்தி வழிபட்டமையால் நாளங்காடிப் பூதமென்று வழங்கப்படுகிறது. வீரர்களும் மறக்குடி மகளிரும் அப்பூதத்திற்குப் பலியிட்டு வழிபடுவார்கள். அவ்விடத்திற் பண்டங்களை விற்பவ ரொலியும், கொள்பவ ரொலியும் கடலொலியினும் மிகுந்து தோன்றும்.

மேலும், அப்புகார் நகரம் சக்கரவாளக்கோட்டம் முதலிய பல கோட்டங்களையும், உய்யானவனம் சம்பாதிவனம், கவேர

வனம் முதலிய பல வனங்களையும் உடையது. இமயமுதற் குமரிவரையும் தனது ஒரு குடைக்கீழாண்ட கரிகாற் பெருவளத்தானுக்கே உறைவிடமாகத் திகழ்ந்தமேன்மையுடைத் தென்னில், அந்நகரின் பெருமை அளவிட்டுச் சொல்ல முடியுமோ?

2, கண்ணகி திருமணம்

இவ்விதமாகிய பலவளங்களும் அமைந்த அக்காவிரிப்பூம் பட்டினத்தில், எல்லா நலனும் ஒருங்கே நிறைந்த, இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்னும் மூவகை வணிகருட் பெருங் குடியர் குலத்தில் மாநாய்கன் என்பானொருவணிகன் இருந் தான். அவனுக்கு உருவுங் குணமு முடனமைந்த கண்ணகி யென்னும் பெண் பிறந்து,

காப்பணியு மிளங்குழவிப் பதநீங்கிக் கமழ்சுரும்பின்
பூப்பயிலுஞ் சுருட்குழலும் பொலன்குழையு முடன்றாழ
யாப்புறமென் சிறுமணிமே கலைபணி சிற்றாடையுடன்
கோப்பமை கிண்கிணியசையக் குறுந்தளிர் மெல்லடி
[யொதுங்கி,

வளர்பிறைபோலவளர்ந்து, நல்லவெனஉறுப்பு நூலவர் உரைக் கும் நலம் நிரம்பிப் பன்னிரண்டாண் டுபருவமுற்றாள்.

அக்காலத்தில் அந்நகரில் அம்மரபில்தோன்றிப் பெரும் பொருளும் பேரருளும் படைத்த நற்குணசீலனாகிய மாசாத்து வான் என்பவனுக்கு மிக்க அழகுடையவனான கோவலன் என் னும் பெயர்பூண்ட மகன் தோன்றிப் பதினாறுவயது பருவ முடையவனாயிருந்தான். பெற்றோர்களாகிய மாநாய்கனும் மாசாத்துவானும் ஒருமைப்பட்ட மனமுடையவர்களாகி, உரு

வும் இளமையும் உயர்பேரொழுக்கமும் படைத்த கோவலனுக்குத் "திருமகட்கு மேல்விளங்குஞ்செம்மணியின் தீபமெனும்" ஒருமகளாகிய கண்ணகியென்னும் பெண்மணியைத் தங்கள் அரும்பெருமரபுக்கேற்ப

இயம்பல துவைப்ப எங்கும் ஏத்தொலி யெடுப்ப மாதர்
நயந்து பல்லாண்டு போற்ற

நிறைகுடம் தூப தீபம் நெருங்கு பாலிகைகள் ஏந்தி நறைமலர் அறுகு சுண்ணம் நறும்பொரி பலவும்வீசிக் குமைகளிர் நாற்புறமுஞ்சூழ, மாமறை விதிவழாமல் மணஞ்செய்வித்தார்கள். கோவலனுங்கண்ணகியும் காகத்தின் இருகண்ணிலும் ஒருமணி கலந்ததுபோல், உடலிரண்டும் உயிரொன்றுமாகக்கலந்த உள்ளமுடையவர்களாய் எல்லாவுயிர்களிடத்தும் அன்புடையவர்களாய் இல்லறநெறியின் வழுவா தொழுகிவந்தனர். அக்காலத்திற் கோவலன் தாயாகிய பெருமனைக்கிழத்தி யென்பவள் தன்மகனும் மருமகளும் தனியேயிருந்து இல்லற தருமத்தை நடத்துதலைக்காண விரும்பி அவர்களை ஓர் புதியமாளிகையில் அமர்த்தி இல்வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களையுங் குறைவின்றிக்கொடுத்தாள்; அவர்களும் அம்மாளிகையிலிருந்து சில ஆண்டுகளைச் செவ்விதாகக் கழித்தனர்.

---

3. மாதவியும் கோவலனும்.

அப்பூம்புகார் நகரம் அக்காலத்திற் கரிகாற்பெருவளத்தான் என்னும் பெயர்பூண்ட சோழபூபதியால் நன்கு ஆளப்பட்டுவந்தது. அந்நகரிற் பொதுமகளிர் குலத்திலுதித்து ஆடல் பாடல் முதலியவற்றுற் சிறந்தவளும், மன்னவனால் நன்குமதிக்கப் பெற்றவளுமாகிய சித்திராபதி யென்பவளுக்கு

மாதவியென்னும் பெயருடைய மகள் ஒருத்தியிருந்தாள். அவள் மயில்போன்ற சாயலும், அன்னம்போன்ற நடையும் மதிபோன்ற முகமும் உடையவள். சித்திராபதியானவள் தன் மகள் மாதவிக்குப் பரதநூலில் வல்லமையுடைய தக்க ஆசிரியர்களைக்கொண்டு, நாட்டியப்பயிற்சிசெய்வித்தாள். மாதவியும் மிகுந்த தேர்ச்சிபடைந்து அரங்கேறுதற்குரிய தகுதி யடைந்தாள். மாதவியின் தாயாகிய சித்திராபதி தன்மகளை அரங்கேற்றுதற்காக நன்னாள் குறித்து, மன்னர் மன்னனாகிய கரிகால் வளவனுடைய அவைக்களத்திற்கு அழைத்துச்சென்றாள்; பரதநூல்வல்ல ஆசிரியர்களும், மற்றையவாத்தியங்களை வாசிப்பவர்களும் வந்துகூடினார்கள். அரசர்பெருமானும் அவைக்களமடைந்தான்; நகரப்பெருமக்களும், அறிஞரும் தங்கள் தங்கள் தகுதிக்கேற்ற ஆசனங்களில் அமர்ந்தார்கள். வணிகர், குலத்தோன்றலாகிய கோவலனும் அவ்விடத்தை யடைந்து ஆங்கு ஓர் உயரிய ஆசனத்தமர்ந்தான். மாதவியும் யாவரும் வியக்கும்படி, கண்முதலிய உறுப்புக்களால் அபிநயஞ்செய்து இனிதாக நடித்தாள். அந்நடனத்தின் புதுமையைக் கண்ட கோவலன் தன்வசமிழந்தான். அவன் மனம் மாதவியையே நாடிநின்றது. இது நிற்க.

வளவர்பெருமானும் மாதவியின் அழகிலும், ஆட்டத்திலும், பாட்டிலும், அபிநயத்திலும் ஈடுபட்டுப் பின்தன் தகுதியை எண்ணித்தெளிந்து, முதன்முதலாக அரங்கேறுவார்க்கு அளிக்கும் ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னும், மணிமாலையும் பலவரிசைகளுங் கொடுத்தனுப்பினான்

மாதவியின் தாய் சித்திராபதி மன்னன் மனமுவந்தளித்த மணிமாலையைத் தோழி வசந்தமாலை கையிற்கொடுத்து “இம் மாலையின்விலை ஆயிரத்தெண்கழஞ்சுபொன்” இதனை அவ்விலை கொடுத்து வாங்கி மாதவிக்கு இறைமாகக் கொடுப்பவரே அவ

ளைப்பெறுதற்குரியவர் '' எனக்கூறும்படி பணித்தனள். வசந்த மாலையும் அப்பணிமேற்கொண்டு மாலையைக்கையிலேந்தி வீதியையடைந்து விலைகூறினள். கோவலன் அதனைக்கண்டு அதன் விலையைக்கொடுத்து வாங்கி மாதவிக்கு அளித்தான். அதுமுதல் தனது மாளிகையைத்துறந்து மாதவியின் மனை புகுந்து அவளோடும் அளவளாவி வாழ்வானாயினன். அக்காலத்து அம்மாதவிக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. அம்மகவுக்குக் கோவலன் விரும்பியபடி மணிமேகலையென்று பெயரிட்டார்கள். இப்படிப்பல ஆண்டுகள் கடந்தன.

4, கண்ணகி பிரிவு

கற்பின் கொழுந்தாகிய கண்ணகி தன் காதலன் பிரிவை ஆற்றாதவளாகிக் கவலைக்கடலில் மூழ்கிப்பெரிதும்வருந்தினள்; அவள் மதிபோன்ற முகம் ஒளிமழுங்கியது. மேனி இளைத்தது. என்றும் அணியத்தக்க மங்கலநாணையன்றி, மற்றைய அணிகலன்களை அறவேமறந்தனள். இத்தகைய பெறுதற்கரிய பல துன்பங்களை யடைந்தும் அவைசிறிதும் வெளித்தோன்றாதவாறு உளத்தேயடக்கித்தன் கொழுநனையே தெய்வமாக நினைத்து, அவன் நலமேபெரிதாக எண்ணித் தன்வாழ்நாளைக்கழிப்பாளாயினள்.

சாமெனிற் சாதல் நோதல் தன்னவன் தணந்தகாலைப்
பூமனும் புனைதலின்றிப் பொற்புடன்புலம்ப வைகிக்
காமனை யென்றுஞ்சொல்லார் கணவற்கைதொழுதுவாழ்வார்
தேமலர்த் திருவோடொப்பார் சேர்ந்தவண்செல்லல் தீர்ப்பார்

என்பது கற்புடைய மங்கையர் இலக்கண மன்றோ ?

5, இந்திர விழா

காவிரிப்பூம்பட்டினத்தைத் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் ஆண்டகாலத்து மழைவளங்குறைந்து வறுமையால் மக்கள் வாடினார்கள். அக்காலத்தில் அகத்திய முனிவர் இந்திரவிழாக்கொண்டாடின் நல்ல மழைபெய்து நாடு செழிக்கும் என்று கட்டளையிட்டார். அதுமுதல் ஆண்டுதோறும் வழுவாமல் அவ்விழாவினைக் கொண்டாடுவார்கள். அவ்விதமாக நடக்கும் இந்திரவிழாவினை முரசறைவோன் நகர மக்களுக்குப் பறைசாற்றியறிவித்தான். அனைவரும் இந்திர விழாவினைக்கொண்டாடினார்கள். ஆடவரும், மகளிரும் அந்நகரிலுள்ள நெடியோன்கோயில், வாசவன்கோயில், வச்சிரக்கோட்டம், முதலிய ஆலயங்களிலும், ஐம்பெருமன்றங்களிலுஞ்சென்று கடவுள் வழிபாடு செய்வார்கள். இராஜவீதிகளிலுள்ள மன்றங்களிலும், மாளிகைகளிலும் புலவர்கள் அறநூற்பொருள்களை அனைவருங்கேட்பச் சொற்பொழிவாற்றுவார்கள். சமயவாதிகள் பலர்கூடிச் சொற்போர்புரிவார்கள். நீர்த்துறைகளிலும், ஆற்றிடைக்குறையிலும், மணல்மேடுகளிலும் தேவர்களும் மக்களுங்கலந்து வேற்றுமையின்றி வாழ்வார்கள். தெய்வலோகம் வறிதாகும்படி எல்லாத்தேவர்களும் இப்புகார் நகரில் தங்குவார்களாகலின் இது தெய்வ உலகமாகவே விளங்கும். யாழ்வல்லோரும், குழல்வல்லோரும் கல்லுமுருகும்படி இன்னிசைதுளும்ப வாசிப்பார்கள். இவ்விழா முடியுநாளில் நகரத்தார்களும் அரசர்பெருமானும் கடலாடச்செல்வார்கள். கடற்கரையில் யாவரும் ஒருநாள் தங்கி மீள்வது வழக்கம். இந்திரவிழாமுடிந்து கடலாடும் நாள்வர, கோவலனும் மாதவியும் நகரமக்களோடுசென்று கடல்நீராடிப் பொன்னுடையணிந்து ஓர் புன்னைமர நீழலில் தங்கியிருந்தார்கள். அப்பொழுது மாதவி, தோழியாகிய வசந்தமாலையின் கையிலிருந்த யாழை

வாங்கி, நாம்புமுதலிய கருவிகளைச் செம்மைப்படுத்திக் கோவலன் கையிற்கொடுத்தாள். அவன் அதைவாங்கி இன்பச்சுவை தழுவிய பலவரிப்பாடல்களைப்பாடினன். அவன் பாடிய பாட்டுக்களால் மாதவிக்கு "இவன் வேறுமகளிர்பால்விருப்புடையனுயிருக்கின்றான்" என்னும் எண்ணம் உதித்தது; உடனே மாதவி அவ்வீணையை வாங்கித்தானும் அத்தகைய குறிப்புடையளெனத் தோன்றத்தக்க சிலவரிப் பாடல்களைப்பாடினள். மாதவி வேறு கணவனிடம் விருப்பமில்லாதவளாயிருந்தும் தனது காதலன்பாடிய பாட்டினால் அவன்குறிப்பு வேறுபட்டதெனத் தோன்றியதனால் இவளும் அதற்கெதிராகப்பாடினளேயன்றி வேறின்று ஆயினும் அவ்விருவர்க்கும் பிரிவை உண்டுபண்ணக்கூடிய ஊழ்வினை முற்பட்டதனாலும், அதனைத் தடுத்தல் அமரர்க்கும் ஆகாதாகலானும், தெய்வப்புலவரும் 'ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான்முந்துறும்' என ஊழ்வலியைப் பெரிதாகக்கூறியதனாலும் அதனைக்கடந்து செல்ல யாவராலாகும்? கோவலனும் அவ்வூழ்வயப்பட்டானாகலின் உடனே மாதவியைவெறுத்து, அவ்விடத்தினின்றும் நீங்கித் தனது மாளிகை நோக்கிப்புறப்பட்டுச்சென்றான்; அப்பால் மாதவியும் தன்னை மிகநொந்து, அக்காதற்கணவன் பிரிவை ஆற்றாமல் உடனே தனதில்லமடைந்து ஓர் தாழைமடலில் தனது பிரிவுத்துயரை எழுதித்தோழியிடங்கொடுத்தனுப்பினள். தோழியாகிய வசந்தமாலை விரைந்துபோய் அவ்வோலையைக்கொடுத்தும், அதனை ஒருசிறிதும் மதியாது மறுத்தான். வசந்தமாலையும் மிகக்கலங்கிமீண்டாள். இது இவ்வாறாக.

6, கண்ணகி கனாத்திற முரைத்தது

காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள ஒரு வேதியனுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். முன்னவள் மகப்பேறற்றவள்

பின்னவளுக்கு ஒரு ஆண்மகவு பிறந்தது. முன்னவள்பெயர் மாலதி. ஒருநாள் குழந்தையைத் தனியேவிட்டு இளையவள் வெளியே போயிருந்தாள். அப்பொழுது அக்குழந்தை பசி நோயால் தேம்பித் தேம்பி யழுதது. மாலதி தன்சக்களத்தி யின் குழந்தையை எடுத்து அணைத்து அதன் அழுகையைத் தணித்துப் பாலூட்டினாள். பால்விக்கி அம்மகவு உயிர்நீங் கிற்று. என்செய்வாள் மாலதி; ஐயோ! ஐயோ!! என்றலறி னாள். மெய்சோர்ந்து மேதினியில் விழுந்தாள்; என் கணவ னும் இளையாளும் என்மீது பழிசுமத்துவார்களே; என்று ஏங்கினாள். பின் ஒருவாறு தேறி அம்மகவை எடுத்துக் கொண்டு வச்சிரக்கோட்டம், கற்பகக்கோட்டம், ஐராவதக் கோட்டம், ஆதித்தன்கோட்டம் முதலிய பல கோட்டங்களையு மடைந்து, "தேவர்களே! என்மனத்துயர் அகலும்படி என் மாற்றாள் மகவினைப் பிழைப்பித்தருள்வீர்; எனப்பன்முறை வேண்டினாள்". அவற்றால் ஒருபயனுங்காணாதவளாய்ப் பின் சாத்தன் கோயிலை யடைந்து வரங்கிடந்தாள். அச்சமயத்தில் சுடுகாட்டுக் கோட்டத்திலிருந்து பிணங்களைத் தின்னுகின்ற இடாகினி யென்னும் பேய், அங்கேவந்து மாலதியை நோக்கி

"செய்தவமில்லார்க்குத் தேவர் வரங்கொடார் பொய் யுரையேயன்று பொருளுரையே" ஆகலின் நீ வரங்கிடந்தும் ஒருபயனுமெய்தாய்; என்றுரைத்து அக்குழந்தையை அவள் கையினின்றும் பிடுங்கி விழுங்கிச்சென்றது வெந்தபுண்ணில் வேலுருவியதுபோல் மாலதிக்கு மேன்மேலுந் துன்பமேவளர்ந் தது; பெருமூச்சுவிட்டுப் புலம்பினாள். அவள் துயரைக்கண்ட சாத்தன் மனமிரங்கி அவளுக்கு அருள்புரியக் கருதி அவள் முன் தோன்றி, அன்னையே! நின் துயரொழிக; நீ மீளுங்காலை இடைவழியில் மகவினைப்பெறுவாய்; செல்க என்றுரைத்து, தான் அவள் செல்லும் வழியில் ஒருகுழந்தையாகிக் கிடந்

தான். மாலதியும் அக்குழந்தையை எடுத்துத் தன்வீடு புகுந்தாள்.

சாத்தனும் அவர்களிடம் வளர்ந்து நல்ல கல்வியும், கேள்வியும் உடையவனாகி விளங்கினான். பின் மணப்பருவ மடையுங்காலையில் பிதா மாதாக்கள் உயிர் துறந்தார்கள். அவர்களுக்குச் செய்யவேண்டிய ஈமக்கடன்களை யெல்லாந் தானே செய்துமுடித்துச் சிலமாதங்கள் சென்றபின் தேவந்தி என்னும் ஒரு வேதியர்குலப்பெண்ணை மணஞ்செய்துக் கொண்டு, எட்டு ஆண்டுகள் இல்லற நெறியை மேற்கொண் டொழுகினான். பின்னர் அவளைப்பிரிந்து தன்கோயில் புக எண்ணியசாத்தன் அவள்முன் தெய்வ உருவத்தோடு தோன் றினான். அத்தெய்வ வடிவைக்கண்ட தேவந்தி வாழ்த்தி வணங்கி மெய்ம்மறந்து நின்றாள்; பின் எந்நாளும் உமக்குத் தொண்டுபுரிதற்காக வரமளிப்பீரென வேண்டினாள்; சாத்த னும் அவளுக்குத் தன் வரலாறுகூறி நீ நாடோறும் எனது கோட்டத்திற்கு வருக, எனப்பணித்து. ஊரிலுள்ளவர்களுக் குத் தான் தீர்த்த யாத்திரை செல்வதாகக்கூறிப்போய்த் தன் கோட்டமடைந்தான் தேவந்தியும் தீர்த்தயாத்திரை சென்ற தன்கணவனுக்கு இடர்வராமற் காப்பாய் எனவேண்டுபவள் போற் குறிப்பித்து நாடோறும் சாத்தன் கோயிலையடைந்து வழிபட்டு வருகின்றாள்

இத்தேவந்தி இளமை முதற்கொண்டு கண்ணகிக்கு உற்றதோழமை பூண்டவளாகலின், காதலன்பிரிவை ஆற்றாது வருந்தும் கண்ணகியின் துயரை நீக்கி அவள் கணவனுடன் கூடிவாழக் கருணைபுரிவாயெனச் சாத்தனை வேண்டினாள் வேண்டியபின்னர்க் கண்ணகியின் மாளிகைசென்று, அவளை நோக்கி "நீ இனி உன்கணவனுடன் சேர்ந்து இன்பமாகவாழ் வாய்" என்றுரைத்தாள். இவ்வித நல்லுரை பகர்ந்த தேவந்தி

பென்னும் பார்ப்பனத்தோழியைக் கண்ணகி அன்புடன் பார்த்து, ஆருயிர்த்தோழி! நீ நினது அருமையாகிய வாக்கினாற் சொன்னபடி என்கணவனைப்பெற்று இன்புறுவேன்; ஆயினும் என் உள்ளத்தே ஓர் ஐயம்நிகழ்கின்றது, அதற்கேற்ற நிகழ்ச்சியும் ஒன்றுளதெனத் தான்கண்ட கனவை அவளுக்குரைக்க விருப்பி, தோழி! நான் நேற்றிரவு ஒரு கனாக்கண்டேன்; என்று அதைக்கூறத்தொடங்கினாள்; அஃதியாதெனில்—யானும் என்கணவனும் இந்நகரை நீங்கி வேறொரு புதிய நகரத்திற்சென்று தங்கினோம். அப்பொழுது அந்நகரத்தார் ஒரு பெரும் பழியை என்மேற் சுமத்தினார்கள். அதனால் என் கணவனுக்குத் துன்பம் நேர்ந்தது; அதனை நான் பிறராலறிந்து அரசனவைக்களத்தை யடைந்து எனது வழக்கினை யுரைத்தேன்; அரசனுக்குங் கேடுண்டாயிற்று; அந்நகரும் அழிந்தது; "தீக்கனாவைப் பிறரிடங்கூறற்க" வெனப்பெரியோர் பணித்தமையால் ஏனைய நிகழ்ச்சிகளைக்கூற மனமில்லாதவளாயினேன்; பின்புநாங்களிருவரும் விண்ணுலகஞ் சென்றோம்; என்பதாம். இங்ஙனம் கூறிய கண்ணகியைத்தேற்றி அவளுக்குப்பல இன்மொழி கூறிப் பின் "பெண்மணி! நீ முற்பிறப்பில் உன் கணவனுக்குச் செய்யவேண்டிய நோன்பில் சிறிது தவறினாய்; அதனால் இவ்விதமான துன்பங்களையடைந்தாய்; காவிரிநதி கடலொடுகலக்குந் துறைமுகத்தினருகில், சோமகுண்டம், சூரியகுண்டம் எனப்படும் இரண்டு பொய்கைகள் உள்ளன. அவற்றில்நீராடி அப்பொய்கைகளினருகேயுள்ள காமன்கோட்டத்தை யடைந்து வழிபாடுசெய்யின் இம்மை மறுமைப்பயன்களெல்லா மெய்தி,எந்நாளுங் கணவனுடன் கலந்துவாழலாம்; நாமும் அவ்விடத்தையடைந்து அப்பொய்கைகளில் நீராடிக்காமனைத்துதிப்போம்; வருக என்றாள். அதனைக்கேட்ட கண்ணகி தேவந்தியை நோக்கி, குலமகட்குத் தெய்வங்கொழுநனேயாகலின்,

நீ உரைத்தவாறு காமன் கோட்டம் புக்குவழிபடல் உரியதன்றென்றாள். இங்ஙனம் இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது ஓர் பணிப்பெண் விரைந்தோடிவந்து, அம்மா! கோவலர் இதோ வருகின்றாரென உரைத்து மீண்டனள்.

7, கோவலனும் கண்ணகியும்

பின்னர்ச்சிறிது நேரத்திற்குள் கோவலனுந் தன்மாளிகையடைந்து, கண்ணகியின் பள்ளியறைக்குச்சென்று தன்பிரிவால் வாடிய அவள்மேனியையும் ஒளிமழுங்கிய முகத்தையும் கண்டு மிகவருந்தினன்; பின் அவளை நோக்கிக் காதலி! பொய்யை மெய்யாகக்காட்டி யொழுகுந்தீயவொழுக்கமுடைய பொதுமகளுடன் கலந்து வாழ்ந்ததனால் முன்னோர் தேடி வைத்த பெரும்பொருளனைத்தும் இழந்து யாவரும் நகைக்கும்படியாக இவ்வறுமை நிலையடைந்தேன்; அது எனக்குமிகுந்த நாணைத்தருகின்றது; என்றான். கொழுநன் மனமுளைந்து கூறிய இம்மொழிகளைக்கேட்ட கண்ணகி, மாதவிக்குக் கொடுப்பதற்குப் பொருளில்லாமையால் இங்ஙன முரைத்தாரென்று கருதி, அடியாளிடத்து இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைக் கொண்டருள்கவெனப்பணிந்து கூறினாள் கோவலன் அதனைக்கேட்டு, அன்புகனிந்த ஆருயிர்ப்பாவாய்! நான் மதுரைக்குச்சென்று இச்சிலம்பினைவிற்று, அப்பொருளை முதலாகக்கொண்டுவாணிகஞ்செய்து பெரும்பொருளீட்டக் கருதுகின்றேன்; நீயும் என்னுடன் வருக, என்றான். கண்ணகியும் அதற்கு இசைந்தனள்.

காதலி கண்ட கனவு கரு நெடுங்கண்
மாதவிதன் சொல்லை வறிதாக்க—மூதை
வினைகடைக் கூட்ட வியங்கொண்டான் கங்குற்
கனைசுடர் கால் சீயா முன்.

8. நகர் கடந்து செல்லுதல்.

அன்றிரவு கடையாமத்திற் கோவலனும் கண்ணகியும் யாவருமறியாதபடி மாளிகையினின்றும் வெளிப்போந்து, இடையில் ஊர்க்காவலாளர் முதலிய ஒருவர் கண்ணுக்கும் புலப்படாமல் வீதிகளைக்கடந்து சென்றார்கள்; போகும்வழியில் அரவணையில் அறிதுயிலமர்ந்த மணிவண்ணப்பெருமானையும், இந்திரவிகாரங்கள் ஏழினையும், அறநூற்பெரியார் வாழும் திருமடங்களையும், பிண்டி மரநிழலில் சாவகரால் அமைக்கப்பட்ட சிலாதலத்தையும் முறையே வணங்கித்துதித்து நகரவாயிலைக்கடந்து, அப்பால் இலவந்திகைச்சோலையை யடைந்து, அதையுங்கடந்து காவிரியின் வடகரையை யடைந்தார்கள். காவிரிக்கரையிலுள்ள வளப்பமாகிய சோலையின் வழியாக ஒரு காததூரம் மேற்றிசை நோக்கிச்சென்று ஓர் அழகிய பூம்பொழிலில் தங்கினார்கள். வழிநடந்த இளைப்பினால் கண்ணகியின் மலர்போன்ற பாதங்கள் நொந்தன. பூங்கொம்பு போல் அவள்மேனி துவண்டது; நிற்க; கண்ணகி காதலனை நோக்கி முகமலர்ந்து மதுரைமூதூர் இன்னும் எத்தனை தூரத்துள்ளதென வினவினாள். கோவலனும் நாம் இப்பொழுது ஒருகாத தூரங்கடந்துவந்தோம்; இன்னும் முப்பது காத தூரம் உளது என்றான். இங்ஙனம் உரையாடிக்கொண்டு அச்சோலையின் வனப்பைக்கண்ணுற்றார்கள் எதிரே ஓர் ஆருகதப்பள்ளிதோன்றியது; அதனைக்கண்டு அவ்விடஞ்சென்று அங்குள்ள ஆருகத சமயத்தவமுதியளாகிய கவுந்தியடிகளைக் கண்டு பணிந்தார்கள். கவுந்தியடிகள் அவர்களைநோக்கி உத்தம இலக்கணமும், உயர்குடிப்பிறப்பும், அதற்குத்தக்க ஒழுக்கமும், அருகநூலிற் கூறிய விரதங்களில் தவறாத நோன்புமுடையீர்களாகக் காணப்படும் நீங்கள் உங்கள் நகரத்தைத் துறந்து தீவினையாளர்போலத் தனியே இவ்விடமடைந்ததற்

குக்காரணம் யாது? என வினவினாள். அம்மொழிகேட்ட கோவலன் கவுந்தியடிகளைப்பணிந்து "மாதவத்தீர்! அடியேன் பொருள் தேடுதற்காக மதுரையம் பதிக்குச்செல்லும் ஆசையி னால் வந்தேன்; இதுவன்றி வேறுகாரணமின்று" என்றான். பின்னர்க்கவுந்திபடிகள் கோவலனை நோக்கி நீ விரும்பியது மிக வும் நன்றே; இப்பெண்மணியின் சீறடிகள் மிகமெல்லியன; இடைவழியிற் சில கடத்தற்கரிய சுரமாகவும் இருக்குமே; அவ்விடங்களைக்கடத்தல் இவளுக்கு ஆற்றொணாத்துயர் விளைக் கும்; ஆயினும் ஊழ்வினையைக்கடத்தல் ஒருவருக்கும் ஆகாது; நீங்களும் போகத்துணிந்தே புறப்பட்டு விட்டீர்கள்; இனி அதைப்பற்றிச் சொல்லியாவதொன்றில்லை; நிற்க. மதுரையி லுள்ள குற்றமற்ற கேள்வியறிவினையுடைய பெரியோர்களி டத்து அறநூல்களைக்கேட்கவும், அருகக்கடவுளை வழிபடுதற் கும் விரும்பினேனாகலின் யானும் உங்களுடன் மதுரைக்கு வரு வேன்; எனமொழிந்தார். கோவலன் மிகமகிழ்ந்து நீரும் உடன்வருவீராயின் இவளைத்தனியே யழைத்துச்செல்லுத லால் விளையுந்துன்பமெல்லாம் இன்றே தொலைந்ததென்று மிகப்பாராட்டினான். மீண்டுங் கவுந்தியடிகள் கூறுவார்,— கோவல! நாம் மதுரைக்குச்செல்லும் இடைவழியில் துன்பந் தருவனவாகிய இடங்கள் பலவுள, வெயிலின் நிறத்தைக் கண் ணாற்பார்க்கவுமாற்றாத இம்மங்கையுடன் இம்மருத நிலத்தின் வழியே செல்லுவோமாயின் வள்ளிக்கிழங்குகளைத் தோண்டிய குழிகள் அருகிலுள்ள சண்பக முதலிய மரங்களின் பூந்தாது களால் நிறைந்து சமநிலமாகத்தோன்றும்; அக்குழிகளை அறிந்து நடத்தல் அரிது; நடந்தாலும் அடர்ந்து தழைத் திருக்கின்ற மரங்களின் கிளைகள் தோளிலும் தலையிலும் முட் டும். வழியிலுள்ள நீர்நிலைகளில், நீர்நாய்களால் துரத்தப் பட்ட வாளை முதலிய மீன்கள் துள்ளிப்பாயும். வயலின்வரப்

புக்களின் வழியேசென்றால், மன்னர்கள் பறித்துக்குவித்த குவளைப்பூவிலிருந்த மதுவினையுண்டு மயங்கிக்கிடக்கும் வண்டுகள் காலிற்படும் கருப்பஞ்சோலைவழியாகச்சென்றால் அங்குத் தேனடைகளில் ஈக்கள் மொய்த்துப் பேரிரைச்சல்புரியும்; அவ்வொலியால் இவள் அச்சமுறக்கூடும்; இவ்விடர்களுக்கெல்லாம் சிறிதுந்தளராமற் செல்லவேண்டும், என்று சொல்லிப் பிச்சைப்பாத்திரத்தைக் கையிலேந்தி தோளிலணியும் உறியும், கையிற்பீலியுங்கொண்டு பஞ்சமந்திரமே துணையாக; என்று புறப்பட்டாள். கோவலனும் கண்ணகியும் உடன் சென்றார்கள். எந்நாளுந்தவறாது நீர்வளஞ்சுரக்கும் பொன்னிநதிபாய்தலாற் செழிப்புற்ற நீர்நிலைகளிலும், கழனிகளிலும், முளைத்த தாமரைக்காடுகளில் சம்பங்கோழியும், காநங்கோழியும், கொக்கும், நீர்க்காக்கையும், அன்னமு முதலிய பறவைகள் ஒலிக்கும் ஆரவாரமும், கருநிறமாகிய மேதியைப்பூட்டி உழும் உழவர்கள் பாடும் ஏர்ப்பாட்டின் இன்னோசையும், உழுதவயலினிடத்து நாற்றுக்களை நடுவோர் ஓசையும், முதிர்ந்த கதிர்களை யறுத்துக்களத்தில் போர்செய்வோரோசையும், அவற்றைக் கடாக்களைப்பூட்டித் துவைக்கின்றவர்களின் ஓசையும், ஆகிய இவற்றைக்கேட்டும், தென்னை, வாழை, மா, பலா முதலிய மரங்கள் பூத்துக்காய்த்துக் கனிந்து தழைத்து நிற்கும் வனப்பும் தடாகங்களில் பூத்திருக்கின்ற செந்தாமரை வெண்டாமரை முதலிய பூக்களின் வனப்புமாகிய இவற்றைக் கண்டும், அயர்வு சிறிதுமின்றிக் காவிரிக்கரை வழியாகவே நெடுந்தூரஞ்சென்றார்கள். செல்லும்பொழுது இடையிடையே தங்கள் அரசனாகிய கரிகால்வளவனுடைய வெற்றியும் நலமுங் கருதியும், மழைவளங்குறித்தும் மூத்தீவளர்க்கும் அந்தணர் வாழ்பதியும், இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும் உழவிடை விளைப்போராகிய வேளாண்மக்கள் வாழிடமும்,

ஆகியபல ஊர்களையுங்கடந்து சீரங்கத்திற்கருகிலுள்ள ஒரு சோலையில் தங்கினார்கள். அப்பொழுது காவிரிப்பூம்பட்டினத்துச் சாவகர்களால் அமைக்கப்பட்ட சிலாதலத்திலிருந்து அறநூற்பொருள்களை அனைவருக்கும் விளங்க உபதேசஞ் செய்யும் சாரணர்இருவர் அவ்விடம் வந்தார்கள்; கவுந்தியடிகள் முதலிய மூவரும் அவர்களைக்கண்டு அடிபணிந்து போற்றினார்கள் அச்சாரணர் இருவரில் ஒருவர் முக்காலங்களு முணரு மறிவுடையராகலின், கோவலனுக்குங் கண்ணகிக்கும் மேல் வரக்கிடந்த தீவினைப்பயனை அறிந்து, இவரிருவர்க்கும் முன்செய்வினை பலிக்குங்காலம் அணுகியது, நல்வினையேனுந் தீவினையேனும் அது தன் விளைவைத் தவறாதளிக்குமாற்றலுடையது; இவர்களுந்தவறாது தம் வினைப்பயனை நுகர்ந்தே தீரவேண்டுமென மொழிந்து, பின்கவுந்திபடிகளை நோக்கி, அறமுதல்வனும், தலைவனும், சினேந்திரனும், பகவனும்,பரமனும், வேதநாதனுமாகிய அருகக்கடவுளருளிய மெய்ப்பொருளை நன்குணர்ந்து அறநூலில் கூறியமுறைப்படி அவனை வணங்கி, அந்நெறிவழுவாது நின்றோரே பிறவிக்கடல் கடப்பார்; அல்லாதார் கடக்கமாட்டார்; என்றார்கள். அந்நன் மொழிகளைக்கேட்ட கவுந்திபடிகளும் அவர்களைப் பணிந்து கைகுவித்து நின்று

ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதுஎன் செவியகம் திறவா
காமனை வென்றோன் ஆயிரத் தெட்டு
நாமம் அல்லது நவிலாது என் நா
ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணாஎன் கண்
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதுஎன்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது

அருகர் அறவன் அறிவோற் கல்லது என்
இருகையும் கூடி ஒருவழிக் குவியா
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லது என்
தலைமிசை உச்சி தானணிப் பொறாஅது
இறுதியில் இன்பத்து இறைமொழிக் கல்லது
மறுதர வோதி என்மனம் புடை பெயராது

என்று அவ்வருக தேவனுடைய இசை மொழிகளைப் பகரக்கேட்ட சாரணர் "கவுந்தி! நின்பாசங் கெடுக" என்றுரைத்து ஆகாய வழிப் போயினர். அப்பால் மூவரும் ஓடமேறிக் காவிரியின் தென்கரையைச்சார்ந்து மலர் நிறைந்த ஒரு சோலையை யடைந்தனர். அவ்வழியாக வந்து கொண்டிருந்த ஓர் பரத்தையும் தூர்த்தனும் கவுந்தியடிகளை நோக்கி, தவத்தாலிளைத்த மேனியையுடைய அடிகாள்! இரதியும் மன்மதனும் போல இங்கு உம்முடன் வந்த இவர்கள் யாவர்? என வினவினர்கள். கவுந்தியடிகள் அவர்களைப்பார்த்து நீங்கள்நினைத்தபடிக் காமனும் இரதியுமல்லர்; மனிதர்களே; இவர்கள் என் மக்கள்; நீங்கள் விலகிச் செல்வீராக; எனக்கூறினர். அம்மொழி கேட்ட அவர்கள், ஒரு வயிற்றுதித்தோர் தம்முள் மணம்புரிந்துவாழ்தலு முண்டோ! என்றனர். அக்கொடுமொழிபொறாது கண்ணகி நடுக்கமுற்றாள். கவுந்தியடிகளும் சினந்து அவர்களை நரிகளாகச் சபித்தனர்.

அத்தீவினையாளர் அப்பொழுதே நரிகளாயினமையைக் கோவலனும் கண்ணகியும் பார்த்து மனமிரங்கி, செய்தவப் பெரியீர்! அறியாமையாற் செய்த இவர்கள் பிழையைப் பொறுத்து அவர்கள் அச்சாப நீங்குங்காலத்தை அருளவேண்டுமெனக் கேட்டார்கள். அப்படியே கவுந்தியடிகளும் ஓராண்டில் இந்நரியுரு வொழிந்து முன்னுருவம் பெறுவார்களாக

எனச் சாபவிடையுஞ்செய்தனர். பின்னர் மூவரும் வழிக்கொண்டு உறையூரை யடைந்தனர்.

காலை யரும்பு மலருங் கதிரவனும்
மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
அகழா லமைந்த அவனிக்கு மாலைப்
புகழா லமைந்த புகார்.

புகார்க் காண்டம் முற்றிற்று

மதுரைக் காண்டம்.

1, கண்ணகியும் கோவலனும் காட்டுவழிச்சேறல்.

கவுந்தியடிகள் முதலிய மூவரும் அன்றுமாலை உறையூரி லுள்ள அருகப் பள்ளியை யடைந்து, அசோகமரத்தின் கீழ் மூன்று திங்களை முறையே அடுக்கினாற்போல நிலவும் சந்திராதித்தம் நித்திய விநோதம் சகல பாசனம் என்னும் முக்குடை நீழற்கண் எழுந்தருளிய அறிவுருவாகிய அருகக்கடவுளை வணங்கி சீரங்கத்திற் சாரணருரைத்த அறமொழிகளை ஆங்குள்ள முனிவர்க்குரைத்து அன்றிராப்பொழுதை அவ்விடத்திற் கழித்தார்கள்; வைகறையிலெழுந்து தென்றிசை நோக்கிச் சென்றார்கள்; கதிர்வன் கீழ்த்திசையிலுதித்தான்; செல்லும் வழியில் வளமாகிய நீர் நிறைந்த மருதநிலமும், தாமரைத் தடாகமுஞ் செறிந்து, இளமரங்களடர்ந்த சோலையினிடத்து ஓர் மண்டபங்கண்டு அதில் தங்கினார்கள். அக்காலத்துத் தென்றிசையினின்றும் ஓர் அந்தணன்

வாழ்க எங்கோ மன்னவர் பெருந்தகை
ஊழிதோ றூழிதோ றுலகங்காக்க
அடியில் தன்னள வரசர்க் குணர்த்தி
வடிவே லெறிந்த வான்பகை பொறாது
பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
வடதிசைக் கங்கையு மிமயமுங் கொண்டு
தென்றிசை யாண்ட தென்னவன் வாழி

யெனப்பாண்டியனை வாயார வாழ்த்திக்கொண்டே அவ்விடம் வந்து தங்கினுன்.

அவ்வந்தணனைக் கோவலன் வணங்கி, நீர்யார்? உமதுஊர் யாது? எவ்விடஞ்செல்கின்றீர்? எனக்கேட்டான். அதற்கு அந்தணன் கூறுவான்:—நான் குடகுநாட்டு மாங்காடு என்னும் ஊரில்வாழ்வோன்; பலதலங்களையுந் தரிசனஞ்செய்து பாண்டிநாட்டைக் கடந்து வருகின்றேன்; இனித்திருவரங்கத்தில் பொன்மலைமீது நீலமேகம் படிந்ததுபோல, ஆயிரவாய்ப் பாம்பணைமேல் அறிதுயிலமர்ந்த அரங்கநாதப் பெருமானையும் வடவேங்கடத்தில் அப்பெருமான் பொன்னுடை புனைந்து, சங்கு சக்கரதாரியாய், நின்ற திருக்கோலமாக எழுந்தருளியிருப்பதையுங் கண்டு தரிசனஞ்செய்ய விரும்புகின்றேன். வரும்வழியிற் பாண்டி நாட்டின் வளத்தையும், பாண்டியனுடைய ஈகையையும் கண்டேனுகலின் அவனை வாழ்த்தி வருகின்றேனென்றுன்; கோவலன் அந்தணனை நோக்கி மாமறை முதல்வ! மதுரைக்குச்செல்லும் செவ்விய நெறியை எங்கட்கு உரைப்பாய்; என அந்தணன் கூறுவான்;— மாநிலம் புரக்கும் வேந்தன் வன்னெஞ்சினராகிய மந்திரிகளோடுங்கூடிச் செங்கோல் செலுத்தாது கொடுங்கோலாட்சி புரிதலால் அரசியலழிந்து வறிதாகக்கிடக்கும் நிலைபோல, விண்ணகத்தில் மிளிருங் கதிரவன் வேனிலாகிய அமைச்சனேடுங்கூடிக் காய்தலினுல் முல்லையுங் குறிஞ்சியும் முறைதிரிந்து, நல்லியல்பு குன்றிக் கண்டோர் நடுங்குமாறு பாலைநிலத்தின் தன்மையை யடைந்திருக்கின்ற இக்கொடுவழியைக் கடந்து செல்லுதல் இம்மங்கைக்குத் துன்பந்தரக்கூடியதே; இனி அதைப்பற்றி உரைத்தாவதென்; நிற்க. கற்பாறையும், பரற்கற்களும் நிறைந்த இவ்வருநெறியைக்கடந்து, நீர் நிறைந்த ஏரியின்கரை வழிச்சென்றுல் அது கொடும்பாளூர் நெடுங்குன்றமென்னும்

இரண்டு ஊர்களுக்கும் நடுவாகப்போகும்; அவ்வூர்களைக்கடந்து முன்சென்றால் பிறைமுடிக் கண்ணிப்பெருமான் திருக்கரத் தேந்திய சூலம்போல மூன்று கிளைவழிகள் பிரிந்து செல்லும் அம்மூன்றுவழிகளில் வலப்புறத்திலுள்ள வழியாகச்சென்றால் விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பும், நீர்வறண்ட கிளை களையுடைய ஓமையும், பொரிந்த தாள்களையுடைய வாகையும் உலர்ந்த மூங்கிலும், இன்னும் பல மரங்களும் செறிந்து நிற் கும். உலர்ந்த தாழைகளும் எவ்விடமும் பாவிக்கிடக்கும்; மான் கூட்டங்கள் உண்ணுதற்கு நீர் கிடைக்கப்பெறாது நாற் புறமுந் தேடித்திரியும்; இவ்வாறு வளங்குறைந்து கிடக்கும் வனமும், எயினர் வாழிடமும் இடையிடையேயுள்ள இவ்வழி களைக்கடந்து சென்றால், மலைச்சாரலில் விளையும் நெற்பயிரும், முதிர்ந்த கரும்பும், தினையும், வரகும், உள்ளியும், மஞ்சளும், கமுகும், தெங்கும், மாவும், பலாவும், மலைவாழையும் என் றிவைகள் நாற்புறமுஞ்சூழப்பெற்று ஓங்கிய பாண்டியனுடைய சிறுமலை அணிபெறவிளங்கும். அச்சிறுமலையை வலப்புறமாக ஒதுக்கி இடப்புறஞ்சென்றால், மதுரை மாநகரையடைவீர்கள்; இனி இடப்புறத்து வழியாகச்செல்ல விரும்புவீர்களாயின் அழகிய சிறகையுடைய வண்டுகள் மொய்க்குந் தாமரைத் தடங்களும், தாழ்ந்த நீர்நிறைந்த கழனிகளும், பூக்கள்மலிந்த சோலைகளும், இடையிடையே சுரநெறிகளுங்கலந்து தோன் றும்; அவற்றையெல்லாங்கடந்து சென்றால் திருமால் குன்ற மென்னும் அழகர் மலை எதிரேதோன்றும்; அம்மலையைக் கடந்து ஓர்பிலவழியாகச் செல்லவேண்டும்; அப்பிலத்தி னுள்ளே தேவர்களாலும் மற்றியாவராலும் புகழத்தகுந்த புண் ணிய சரவணம், பவகாரணி, இட்ட சித்தியென்னும் மூன்று திருக்குளங்கள் முறையே விளங்கும்; அம்மூன்றனுள் புண் ணிய சரவணத்தில் முழுகுவீராயின் இந்திரனாற்செய்யப்பட்ட

ஐந்திரம் என்னும் வியாகரணத்தை நன்கறிவீர்கள். பவ காரணியென்னும் பொய்கையிற் படிந்தாடுவீராயின் பழம் பிறப்புணர்ச்சியை யடைவீர்கள்; இட்ட சித்தியில் மூழ்குவீ ராயின் நினைத்தவற்றை நினைத்தவாறெய்துவீர்; அப்பிலத்துள் நீங்கள் செல்ல விரும்புவீர்களாயின், அழகர் மலையில் எழுந் தருளியிருக்கின்ற திருமாலை மனம் வாக்குக்காயங்களால் நினைத்துத் துதித்து, வணங்கிமூன்றுமுறை வலம்வந்து, அங் குள்ள சிலம்பாற்றங்கரையில் நின்றால் அவ்வாற்றங்கரையி லுள்ள கோங்கமரத்தடியில் புயல்போன்ற கருங்கூந்தலையும் தொடியணிந்த தோள்களையுமுடைய பொற்கொம்பனைய வரோத்தமை யென்பவள் உங்களுக்கெதிரே தோன்றுவாள்; அவள் உங்களைநோக்கி இம்மையின்பம் யாது? மறுமையின் பம் யாது? இம்மை மறுமை யிரண்டுங்கடந்த அழியாத இன் பம்யாது? இம்மூன்று வினக்கட்கும் விடைபகர்வீராயின் இப் பில நெறியைத் திறந்துவிடுவேன்; என்பாள். அவ்வினாக் களுக்குத்தக்க விடை பகர்வீராயின் உடனே கதவைத்திறந்து வழிகாட்டுவாள்; உள்ளே சென்று பல வாயில்களையுங்கடந்து போனால் இரண்டு கதவுடன்கூடிய ஒருவாயில் தோன்றும்; அதனருகிற் பூங்கொடிபோல்வாளொருமாது தோன்றி, ஈறில் லாத இன்பம்யாது? விடை கூறீராயினும் உங்களை வருத் தல் செய்யேன்; என்றுரைப்பாள். அதற்கு விடைகூறுவீரா யின் உங்களை உடனே அழைத்துச் சென்று அம்மூன்று பொய்கைகளையுங் காட்டிச் செல்வாள்; பின் நீங்கள் உங்க ளுக்கு விருப்பமான பொய்கையில் திருவைந்தெழுத்தையும், எட்டெழுத்தையும் நினைத்து முழுகி அவ்வப்பயன்களை யடை வீர்கள்; நீங்கள் அடையும் பயன் எத்தகைய தவமுடையார்க் கும் அடைதல் அரிது. அப்பொய்கையில் நீராட விரும்பு வீர்களாயின். அத்திருமாலை உளத்தே நினைத்து முன்னர்த்

தோன்றுங் கருடத்தம்பத்தைக் கண்டு, உள்ளே சென்று அழகர் திருவடிகளை வணங்கின், அழியாப் பேரின்பம் பெறுவீர்கள்; அவ்வழியாகவே அம்மலையைக்கடந்து சென்றால் மாடங்களோங்கிய மதுரையைச் சேர்வீர்கள்.

இனி இவ்விரண்டிற்கும் இடையே யுள்ள வழி மற்றைய இரண்டு வழிகளினுஞ் சிறப்புடையதும், செம்மையானதுமாம்; நாடு நகரங்களும் இடையிடையே சிறு காடுகளுங் கலந்து தோன்றும்; அவ்வழியே சென்றால் வழியில் ஒரு பெண்தெய்வம் வெளிப்பட்டு வழிவருவோரைத் துன்பப் படுத்தாமல், இனியமொழிகளைப் பேசி வழிப் போக்கைத்தடுக்கும்; அதன் மயக்கத்திற்கு உட்படாமல் சென்றால் அருகிலுள்ள மதுரையம்பதிபுகுவீர்கள்; இம்மூன்று வழிகளில் நீங்கள் விரும்பிய வழிச்செல்லுங்கள்; யானும் நிலங்கடந்த நெடுமுடியண்ணலை வணங்கச் செல்கின்றேன்; என்றான். அதனைக் கேட்ட கவுந்தியடிகள்; அந்தணனைப்பார்த்து நலம் புரி கொள்கை நான்மறையாள! ஐந்திர வியாகரணத்தை எங்கள் ஆகமத்திற் காண்போம்; முற் பிறப்பிற் செய்தவற்றை இப்பிறப்பிற் காணலாம்; கொல்லாமையும் வாய்மையு முடையார் நினைத்தவற்றை நினைத்தவாறெய்துவார்; ஆகலின் புண்ணியசரவணம் பொருந்தலும், பவகாரணியிற்படிதலும், இட்டசித்தியின் மூழ்கலும் எங்கட்கு வேண்டா; நாங்கள் விரும்பிய வழியே செல்வோம்; நீரும் விரும்பிய கடவுளை வழிபடச்செல்வீராக என விடை கொடுத்து, அவ்விடத்தினின்றும் புறப்பட்டுச் சென்றார்கள்; அன்றிரவு வழியிலுள்ள ஒரு ஊரில் தங்கியிருந்து, மற்றை நாட்காலையிலெழுந்து அந்தணன் கூறிய மூன்று வழிகளில் இடைவழியாக நடந்தார்கள்; நடக்கும்போது கவுந்தியடிகட்குங் கண்ணகிக்கும் நீர் வேட்கை மிகுதியாக ஒரு மரநிழலில் தங்கினார்கள். கோவலன் தண்ணீர்

கொண்டுவரத் தனியேசென்று அங்குள்ள ஒரு பொய்கைக் கரையை யடைந்தான். அப்பொழுது அந்தணன் கூறிய வனதேவதை, மாதவியின் தோழியாகிய வசந்தமாலையினுரு வங்கொண்டு கோவலனையடைந்து, அவனடியில் விழுந்து வணங்கிக் கண்ணீர் சொரிந்து வணிகப்பெருந்தகையே! உம் மைத்தேடியே இக்கொடிய காட்டுவழியாகத் தனியே நடந்து வந்தேன்; நீர் பிரிந்த அன்று மாலை மாதவி கொடுத்த தாழை மடலைக்கொண்டுவந்தபோது நீர் அதனை ஏற்றுக்கொள்ளாது மறுத்ததை நான் மீண்டு மாதவியிடம் உரைத்தேன்; அவள் என்பாடலில் சிறிதும் பிழையில்லை; நீ சென்று உரைத்த மொழிகளில் ஏதோ தவறு நேர்ந்தது; அதனாலேதான் ஒரு கணமும் என்னைப்பிரியாத அன்பர் இன்று வராதொழிந்தனர்; எனக்கடிந்து பேசினள்; அம்மொழி பொறாது உம்மை நாடிப் பலவிடங்களிலும் அலைந்து திரிந்து இவ்விடம் வந்து உம் மைக்கண்டேன்; என்றனள். கோவலன் ஐயமுற்றான்; அந்த ணன் கூறிய வனதேவதையோ! அன்றி வசந்தமாலைதானோ வெனத் துணியமாட்டாது சற்றுத் தயங்கினான்; பின் தெளிந்து அந்தரியின் மந்திரத்தைச் சிந்தனை செய்தான்; அம் மந்திரவன்மையால் அவ்வனதேவதைக்குக் கோவலனை மயக்க முடியாமல் அச்சமுண்டாயிற்று; உடனே அத்தெய்வம் கோவலனை வணங்கித் தன் உண்மை வரலாறுகூறி, தன் பிழையை மன்னித்துக் கவுந்தியடிகட்குங் கண்ணகிக்கும் உரையாதொழிக; எனவேண்டி அகன்றது. கோவலனுந் தண் ணீர்குடித்து இளைப்பாறி, ஓர் தாமரையிலையில் அவர்களுக்கும் நீர்கொண்டுவந்து கொடுத்தான்; அவர்களும் அந்நீரருந்தி இளைப்பாறி அப்பாற் செல்ல நினைத்தார்கள்; ஆயினும் மேற் செல்லும்வழி வெயிலின்கொடுமை நிறைந்த சுரநிலமாக இருந் தமையால் கண்ணகியின் மெல்லிய சீறடிகள் ஆற்றாவென்

றெண்ணிச் சிறிது தூரத்திலுள்ள குரவும், வெண்கடம்பும், கோங்கும் வேங்கையுமடர்ந்த ஒரு பொழிலில் நடுவேயுள்ள ஐயை என்னுந் துர்க்கையின் கோயிலையடைந்தார்கள் இவர்கள் இவ்வாறாக;

2, ஐயை கோட்டம்

அக்கோயிலினருகே வழிபறித்துண்ணும் வாழ்வினையுடைய வேடர்கள் வாழுஞ் சிற்றூரொன்றுளது; அவர்கள் ஐயை கோட்டத்தில் பலியிட்டுப் பூசைசெய்யும் வழக்கத்தை நிறுத்திவிட்டதனால் வளங்குறைந்து தாழ்ந்த நிலையில் வாழ்ந்தனர்; அவ்வாறிருக்கும்போது அவ்வேடர் குடியிற்பிறந்த சாலினியென்னுந் தேவராட்டியின்மீது ஐயை ஆவேசமாகி வேடர்காள்! நீங்கள் வழிபடுந்தெய்வத்தை மறந்தீர்கள்; அதனால் உங்கள் வருவாயெல்லாம் குறைவுற்றன; உங்கள் மன்றமும் பாழாயிற்று; உங்கள் பகைவரெல்லாம் ஆக்கமுற்றார்கள்; இன்னும் நாள்கழிப்பீராயின் மிகக்கேடுறுவீர்கள்; ஆகலின் விரைந்து இப்பொழுதே ஐயை கோயிலையடைந்து வழிபடுங்கள்; என்றாள். உடனே வேடர்கள் அனைவருங்கூடி ஐயைக்குப் பூசைசெய்வதாக முடிவு செய்துகொண்டு, தங்கள் குலத்துப் பழங்குடியிற் பிறந்த ஒரு குமரியை அழைத்து, அவள் கூந்தலைப் பின்னலிட்டு, அதிற் பொற்பாம் பணிந்து, பன்றிக் கொம்பினைப் பிறையாகச்சேர்த்து, புலிப்பற்றாலியைக் கழுத்திலணிந்து, வளைந்த வில்லையும் பந்தையும் கழங்கையும் அவள் கையிற் கொடுத்துத் திருகிய கொம்பினை யுடைய கலைமீது அவளை ஏற்றி, எயின் மகளிர் சாந்தம், புகை. பூ வண்ணம், சுண்ணம் முதலிய வற்றை ஏந்தி உடன் சூழ்ந்துவர, கிளியும், மயிலும், கானக்கோழியு முதலிய வற்றைக் காணிக்கையாகக்

கொண்டு, வழிமறிக்குங் காலத்துக் கொட்டுகின்ற பறையும், சூறையாடுங் காலத்து ஊதுகின்ற சின்னமும் கொம்பு முதலிய வாத்தியங்களு முழங்க ஐயை கோட்டத்தை யடைந்து, எள்ளுருண்டையும் நிணச்சோறு முதலிய வற்றை நிவேதனஞ் செய்து சந்நிதியில் நின்று.

ஆனைத்தோல் போர்த்துப் புலியி னுரியுடுத்துக்
கானத்தெருமைக் கருந்தலைமே னின்றாயால்
வானோர் வணங்க மறைமேன் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்.
வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்றுக்
கரியதிரி கோட்டுக் கலைமிசை மேனின்றாபால்
அரியரன் பூமேலோன் அகமலர்மேன் மன்னும்
விரிகதிரஞ் சோதி விளக்காகி யேநிற்பாய்.
சங்கமுஞ் சக்கரமுந் தாமரைக் கையேந்திச்
செங்கணரிமான் சினவிடைமே னின்றாயாற்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை யுருவாய் மறையேத்தவே நிற்பாய்.

எனத் துதித்து வேண்டினர்கள்.

ஐயை வேடர்கள் பூசையை யேற்று மகிழ்ந்து தேவ ராட்டியின் மீது ஆவேசமாகி ஆடுவாள் ஆண்டு ஒருபுறங் கோவலனுடனிருந்த கண்ணகியைப்பார்த்து, இவள் கொங்க நாட்டினையாளுஞ் செல்வி; குடக நாட்டினையாளுஞ் செல்வி; தமிழ் நாட்டினையாளும் பாவை; இவ்வாறு அனைவராலுந் துதிக்கப்படுதற்கு முற்பிறப்பிற் செய்த நல்வினைக் கொழுந்து போல்வாள்; இவ்வுலகத்திற்கு முழு மாணிக்கம் போலுயர்ந்த பெண்ணுருக்கொண்ட வோர் திருமணி, எனப்புகழ்ந்தாள். தேவராட்டி கூறிய மொழிகளைப் பொருத கண்ணகி இவள்

தெய்வ மபலாற் கூறினு ளென்றுகருதி நாணமுற்றுத் தன் கணவன்பின்னே மறைந்து நின்று புன்னகைபுரிந்தாள். பின்னர் ஐயை, வேடர்களுக்கு அவரவர்கள் விரும்பிய வரங்களை யளித்து மறைந்தாள்; வேடர்களும் தங்கள் இருப்பிடஞ் சென்றார்கள்.

பின்னர்க் கோவலன் கவுந்தியடிகளைத் தொழுது, இனி நாம் செல்லும் வழிகள் கதிரோன் கொடுமைமிகப் பெற்றதாகலின பகல்வழிச் செல்லுதலினும் இராவழிப் போதல் மிகவும் நன்று; மேலும் இனிச் செல்லும் நாடு உலகெலாம் பரந்தபுகழ் விளங்கிய செங்கோல் வழுவாப் பாண்டியராற் காக்கப்படு நாடாகலின் கரடி முதலிய கொடிய விலங்குகளாலும், தேள் அரவம் முதலிய விஷஜெந்துக்களாலும், முதலை முதலியவற்றாலும் ஒருவிதமான துன்பங்களும் உளவாகா; ஆகலின் சிறிதும் அச்சமின்றி நிலவொளியிற் போகலாம்; என்றுரைக்கக் கவுந்தியடிகளும் அது நன்றேயென்று இசைந்தார். அப்பால் அம்மூவரும் கொடுங்கோலாசன் கீழ் வாழுங் குடிகள் அவனொழியச் செங்கோல் மன்னன் வரவினை விரும்பியிருத்தல் போல, வெய்யோன் மறையத் திங்கள் தண்கதிர் பரப்பி எழுஞ்சமயத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

கதிரோன் மேல் கடற்படிந்தான்; வானகத்தே தாரகைக் கூட்டங்களும், வெண்டிங்களுந் தோன்றின; பொதியமலையிலிருந்து வருந் தென்றல் மிருதுவாக வீசியது; கவுந்தியடிகள் முதலிய மூவரும் புறப்பட்டார்கள்; அப்பொழுது கோவலன் காதலியை நோக்கி நாம் செல்லும் வழியிற் புலிகள் மறுகும்; பேராந்தை குழறும்; கரடி இடிக்கும்; இவற்றால் சிறிதும் அச்சங் கொள்ளாது வருவாய்;என்று தேறுதல் கூறினன்; கவுந்தியடிகளும் பல அறமொழிகளைப் பகர்ந்து கொண்டே நடந்

தார்; கண்ணகி சிறிதும் அஞ்சாமற் கணவன் தோளைப்பற்றி வழி நடந்தாள் இராப்பொழுது கழியச் சூரியன் வருகையை முன்னர் அறிவிப்பது போற் சேவல் கூவியது; அவ்வைகறைப் பொழுதில் அவர்கள் மூவரும் ஒரு அந்தணர் வாழும் நகரத்தையடைந்தார்கள். கோவலன் அவர்களை ஒரு நல்ல இடத்தில் இருத்திக் காலைக்கடன்களை முடிப்பதற்காக ஒரு தடாகக்கரையை யடைந்து, தானும் தனது காதலியும் இவ்வாறு தனியே வந்து துயருறும் படி நேர்ந்ததே யென்றெண்ணிப் பெருமூச்செறிந்து முகம்வேறுபட்டு நின்றுகொண்டிருந்தான். இது நிற்க.

---

3. கோவலனும் கௌசிகனும்.

அன்று காவிரிப்பூம் பட்டினத்தில் மாதவியைப் பிரிந்து வசந்தமாலைகொண்டு வந்த தாழைமடலையும் மறுத்த பின் "இன்று வாராராயினும் நாளைக்காலையிலேனும் வருவா"ரென்று ஆவலுடன் காத்திருந்த மாதவி, வைகறையில் தன்குல மணையாட்டியுடன் யாரு மறியாதபடி நகர் நீங்கிப் போனார் என்பதை யறிந்து, கௌசிகனென்னும் ஓரந்தணனை யழைத்துத் தன் பிரிவின் துயரை விளங்கவுரைத்து, அவனிடம் ஒரு ஓலையெழுதிக்கொடுத்து, எவ்வாறேனும் நீர் இதனை என் காதலர் கையிற் சேர்ப்பித்து, அவரையும் அழைத்து வரவேண்டுமெனப் பணித்தாள். கௌசிகனும் அதற் கிசைந்து பல நகரங்களையும், வனங்களையும் சுரங்களையும் அரிதிற் கடந்து கோவலன் நின்று கொண்டிருந்த நீர் நிறைந்த தடாகத்தினருகே வந்து சேர்ந்தான். கௌசிகன் கோவலனை முன்னமே நன்குணர்ந்தானாயினும், அவன் இரவும் பகலுமாக நெடுந்தூரம் நடந்து வந்ததனாலும், வெயிலின் கொடுமையிற்பட்டதனு

னும், மனத்துயரினலும் மேனிகருகி முகஞ்சோர்ந்து உருமாறியிருந்ததனல் ஐயமுற்ருன்; பின் அவ்விடத்திலுள்ள ஓர் குருக்கத்திமரத்தைப் பார்த்தான். அம்மரம் இலைகளும் மலர்களும் உதிரப்பெற்று நின்றது. அம்மரத்தை மாதவியென்றுங் கூறுதல் உண்டு. அந்தணன் இவன் கோவலனே, அன்றி வேறுயாரோ என்றறியுமாறு ஒருபாயஞ்செய்தான்; அம்மரத்தைப் பார்த்து, ஏ! மாதவியே! தன் கணவன் பிரிந்ததுயர் பொருது தானணிந்த அணிகலன்களெல்லாவற்றையுங்களைந்து, மலர்மாலையுஞ் சூடாது ஒளிமழுங்கிய மாதவிபோல நீயும் இலை முதலியனவெல்லாம் உதிர்ந்து வாடி நிற்கின்ருயே! மாதவியென்னும் பெயரொப்புமையான் இவ்வாறு செய்தாயோ என்ருன். அம்மொழிகளைக்கேட்ட கோவலன் திரும்பி கௌசிகனை நோக்கி நீகூறிய மொழிகளின் பொருளை விளங்க உரைப்பாய்; என்ருன். அவனும் இவனே கோவலன் எனத் துணிந்து கூறுவானயினன்:—வணிகர் குலமணியே! உனது பிரிவால் உன் தந்தையுந் தாயும் மணியிழந்த நாகம்போலப் பெருந்துன்ப மெய்தினர்கள்; உனது நெருங்கிய சுற்றத்தார் உயிரிழந்த உடல் போலச் சோர்வுற்றனர் உன்னைப்பிரிந்த புகார் நகரம் இராமனும் ஜானகியும் பிரியப்பெற்ற அயோத்தி நகரின் தன்மையையடைந்தது; அந்நகர் படுந்துயர முழுதுங்கூறுதல் என்னலியலாது; அன்றுமாலை மாதவியின் ஓலையை நீமறுத்ததனல் இரவு முழுதும் தாமரைபோற்சோர்வுற்று, காலையில் நீவருவாய் எனக்காத்திருந்தாள்; பொழுது விடிந்தவுடன் நீநகர் நீங்கியது கேட்டுப் பெரிதுங்கலங்கி இவ்வோலையை எழுதி என்னிடங்கொடுத்து, என்கண்மணிபனையாற்குக் காட்டுவாய் என்றனள். யானும் அவ்வோலையுடன் பல விடங்களிலுந்தேடி இவ்வரிய கானகத்தையடைந்து உன்னைக் கண்டேன்; என்று ஓலையை நீட்டினன்; அவ்வோலையில்.

"அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனங்கொளல் வேண்டும்
குரவர் பணியன்றியுங் குலப்பிறப்பாட்டியோடு
இரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு அறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி" என்றிருக்கக்கண்டான். சிறிது நேரம் சிந்தித்து மாதவி குற்றமில்லாதவளே; யானே மாறாக நினைத்தேன்; இது எனது வினையின் பயனே எனத்தேர்ந்து அவளிடங்கொண்ட கோபம் நீங்கினான். அவ்வோலையிற் குரவர்பணியன்றியும் எனக் குறிப்பித்ததினால் தன் தந்தை தாயர்க்குச்செய்யவேண்டிய கடமையை மறந்து வந்ததற்கும் வருந்தினான்; பின் அவர்கட்கு ஒரு ஓலையெழுதி அந்தணன்பாற் கொடுத்து, என்பெற்றோர்க்கு என் வணக்கங் கூறி அவர்கள் தளர்ச்சியைத் தீர்த்தல் உனதுகடன்; உன்னோடு வரக்கூடாமைக்கு மிக வருந்துகின்றேன்; என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டுத் தன் கடன்களை முடித்துக்கொண்டு கண்ணகியும் கவுந்திபடிகளுந்தங்கிய இடத்திற்குச் சென்றான்; பின்னர் மூவரும் அவ்விடம் விட்டுப்பெயர்ந்து சென்றார்கள்; செல்லும் வழியில் பாணர்கள் வாழும் ஊரொன்று குறுக்கிட்டது; அவ்விடத்தில் தங்கினான் கோவலன்; அப்பாணர்களோடு சிலநேரம் இசைபாடி அளவளாவினான்; அப்பால் அவர்களைநோக்கி மதுரை எத்தனை காததூரத்துள்ளது என வினவினான். அதற்கு அவர்கள் ஐய! சந்தனக்குழம்பும் கஸ்தூரிச் சாந்துமாகிய தெய்வமணங்கமழுஞ் சேற்றைப்பூசிக்கொண்டு, குருக்கத்தியும் மல்லிகையும் முல்லையுமாகிய பூவணையிற் பொருந்தி அகிற்புகையும் ஆகுதிப்புகையுமாகிய நறும்புகைவிரவி, இந்திரனணிந்த ஆரத்தைத்தாங்கிய வெற்றியையுடைய பாண்டியனது மதுரை மூதூரினின்றும்

வரும் இத்தென்றல் பொதியமலைத் தென்றலினும் பொலிவுற வீசுவதைக்காணீர்; இது புலவர்களாலும் புகழப்படும்பெருமை யுடைத்து; ஆகலின் மதுரை மூதூர் மிக அண்மையிலுள் ளதே; சேய்மையிலுள்ளதன்று; இராவிற்செல்லினும் ஒருவித இடையூறும் விளையாது; நீங்கள் பகற்பொழுதை இவ் விடத்தே கழித்துச்செல்க; என்றார்கள்.

அவர்கள் விரும்பியவாறே மூவரும் அன்று பகற்பொழுது கழித்து இராவழிக்கொண்டு மதுரையை ஆவலுடன் நோக் கிச்சென்றார்கள். செல்லுங்காலை மதுரை மாநகர்ச்சிவபெரு மான் திருக்கோயிலிலும், பெரும்புகழ்ப்பாண்டியன் மாளிகை யிலும் ஒலிக்கின்ற முரச ஒலியும் அந்தணர் நான்மறை போதும் முழக்கமும், மாதவர்களின் மந்திரவோசையும், வீரர் கள் சாற்றும் முரசின்னொலியும், யானைகளின் பிளிறலும், குதிரை களின் கனைப்பும், மன்னர்கள் மருதநிலத்திற் கொட்டும் பறை யோசையும் செவிப்புகுதலால் தாமடைந்த துன்பமெல்லாந் தவிர்ந்து, இன்பமேலிடப்பெற்றவர்களாய், குராவும், கமுகும், நோக்கும், வேங்கையும், வெண்கடம்பும், சுரபுன்னையும், மஞ் சாடியும், மருதமும், செருந்தியும், சண்பகமும், அடர்ந்து மல் லிகை, முல்லை முதலிய பூங்கொடிகள் படர்ந்து இனிய காட்சி யளிக்கும் வையையாற்றின் கரையை யடைந்து அக்கரைவழி யாகச்சென்று மதுரைத் துறையை யடைந்து, பலவிதமான நறுமலர்களைத் தன்மேற் பரப்பிக்கொண்டு வருதலாற் காண் பார் "புனல்யாறன்றிது பூம்புனல்யா"றெென ஐயுறுமாறுவிளங் கும் வையையாற்றினைக்கடந்து மதுரை நகர்க் கீழ்த்திசைவாயி லின் புறத்தே

"புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீரேரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையுங் கமுகும்
வேய்த்திரட் பந்தரும்" விளங்கப்பெற்றதாய் அறம் புரியும் அருந்தவத்தினர்க்கே யுறைவிடமாயுள்ள புறஞ்சேரியில் தங்கினர்கள்.

4, புறஞ்சேரியில் தங்கிய வரலாறு

"வடுவின் மாநில மடந்தை மார்பிடைக் கிடந்திமைக்கப்
படுவிலாரமே பாண்டியநா டாரமேற் பக்கத்
திடுவின் மாமணி யதன்புற நகரெலா மிவற்றுள்
நடுவி னுபக மாமணி மதுரைமா நகரம்.
திருமகட்கொரு தாமரைக் கூடமே திருமால்
மருமகட்குவெண் டாமரை மாடமே வானந்
தருமகட்கி போகத் தனிப்பீடமே தரையாம்
பெருமகட் கணிதிலகமே யானதிப் பேரூர்" என்று புகழ்ந்துரைக்கப்படுகின்ற மதுரைமா நகரின் புறஞ்சேரியை யடைந்தகாலையில் இளஞாயிறு கீழ்த்திசையி லுதயஞ்செய்தான். செந்தாமரைகள் கணவன் வருகையைக்கண்ட கற்புடைமாதர் முகம்போல் மலர்ந்தன; நீர்நிறைந்த வயல்களிடத்தும்; மரங்களடர்ந்த சோலைகளிலும் பறவைகள் ஆரவாரித்தன; நகரத்தினுள்ளே பலவகை முரசங்களும் ஒலித்தன; அம்மதுரைமா நகரம் அக்காலத்திற் பாண்டியன் நெடுஞ்செழியனுற்கோல் கோடாது ஆளப்பட்டு வந்தது; நிற்க.

கோவலன் கவுந்தியடிகளை வணங்கி, செய்தவப்பெரியீர்! சிறிதும் அறிவில்லாதயான் முறைதவறியொழுகிய ஒழுக்கத்தால், நாணமற்றவர்கள்போல வெளிப்பட்டு மலர்போலும்

மெல்லிய தன்மையையுடைய இக்கண்ணகியோடு வழியில் பல இன்னல்களை யடைந்து அறியாத இந்நாட்டினை யடைந்தேன்; இவ் வருநெறியில் இரவும் பகலும் அலைந்து திரியுங்காலம் எங்கட்கு வருமென்பதை இதற்குமுன் எவ்வளவு மறிந்திலேன்; இத்தகைய துன்பங்களை யடையும்படி முன்செய்த தீவினை இன்னதென்றறிகிலேன்; இனியான் மதுரைக்குச்சென்று அங்குள்ள வணிகரைக்கண்டு எனது வரலாற்றை உரைத்து மீண்டு வரும் வரையில் உமது காவலில் உள்ள இக்கண்ணகிக்கு ஒரு துன்பமும் உண்டாகாது; நீர் எங்களுடன் மதுரைக்குப் புறப்பட்ட அன்று முதலே இந்நங்கையைப்பற்றிய கவலை யொழிந்தேன்; இனி எனக்கு விடைதருக; என்றான் கவுந்தியடிகள் கோவலனை நோக்கி, நீ முற்பிறப்பில் நல்வினைசெய்து பின் சிறிது தீவினையுஞ் செய்தாயாகலின், பெற்றோர்தேடிய பெரும் பொருளையும், சுற்றத்தையுந்துறந்து நின்காதலியோடும் தனித்துவந்து துன்பமுற்றனை; அறங்கூறும் பெரியோர் உலகத்தாரை நோக்கி நீங்கள் ஒருயிர்க்குந் தீமைசெய்யாதீர்கள்; செய்வீராயின் அது உம்மை விடாமல் பற்றும்; எனப்பலமுறை உரைப்பினும் தமக்குறுதியுணராதார் அம்மெய்யுரையைக் கொள்ளாதவர்களாய்ப் பின் துன்பமடையுங்காலத்து மனமழுங்குவார்கள்; கற்றுணர்வுடையோர் வினைப்பயன் விளையுங்கால் மனமழுங்கமாட்டார்கள் இனி மகளிரைக்கூடும் முயற்சியால் விளையுந்துன்பமும், பின்பிரிதலால் விளையுந்துன்பமும், பொருளைத்தேடுதற்கண் உண்டாகுந்துன்பமும், அதனை இழத்தற்கண்வருந்துன்பமும் உலகப்பற்றுடையார்க்கே யன்றிப் பற்றிகந்த தனிவாழ்வுடைய எம்போன்றார்க்குச் சிறிதும் இல்லை. இன்னுங்கேள்; தந்தையின் ஆணைப்படி மனையாளுடன் காட்டிற்சென்று, காதலியைப் பிரிந்து அல்லலடைந்தவன் வேதமுதல்வனாகிய பிரமனைப்பெற்ற பெரியோனென்பதை நீ யறிந்திலையோ?

புட்காரனோடு கவருடி பூமியையும், பொருளையும், அரசியலையுந் துறந்த நளன், காரிருளிற்பாழ் மண்டபத்தில் காதலியைப்பிரியச் செய்வித்ததும் அவ்வினைப்பாடனன்றோ?

நீயும் அவர்களைப் போலத் துயருற்றா யெனினும் உன் காதலி உன்னைப்பிரியாது உடனுறையப் பெற்றாயாகலின் சிறிது நல்வினையுமுடையாய்; நீமனக்கலக்கங் கொள்ளா தொழிக; இனி மதுரைமாநகர் சென்று வருக எனவிடை கொடுத்தார். கோவலனும் வணங்கிச் சென்றான்.

5, கோவலன் மதுரை சென்று மீளல்.

சென்ற கோவலன் அப்மதுரை நகரத்தின் வானளாவிய மதிலைக்கடந்து, அறுடத்து நான்கு கலைகளையும் ஐயமற ஓதி யுணர்ந்து, விழுமிய ஒழுக்கமுடையராய் வாழும் அந்தணர் வீதியும், அரசர் வீதியும், வைசியர் வீதியும், வேளாளர் வீதியும், பரத்தையர் வீதியும், அரசருப்விரும்பும் அருங்கல நிறைந்த அங்காடி வீதியும், எலிமயிராலும், பட்டினாலும், பருத்தியினாலும், கம்பளங்களும், ஆடைகளும் நெய்கின்ற சாலியர் வீதிகளும், மாணிக்கம், மரகதம், வைடூரியம், வைரம் கோமேதகம், புருடராகம், நீலம், முத்து, பவளம் என்னும் நவமணிகளையும் விற்கின்ற இரத்தினக்கடை வீதிகளும், சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புநத மென்னும் நால்வகைப் பொன்னும் விற்கின்ற பொற்கடைவீதிகளும், கூலவாணிகர் வீதியும், நாற்சந்தியும், நெடுந்தெருக்களுமாகிய இவற்றின் வனப் பெலாங்கண்டு தான்வந்த காரியத்தை மறந்து கவுந்தியடிகள் உறையும் புறஞ்சேரியை யடைந்து, வணங்கித் தான் கண்ட காட்சிகளைப் புகழ்ந்து பேசி இன்புற்றிருந்தான்.

---

6. மாடலனும், கோவலனும்.

அப்பொழுது பொன்னிவளநாட்டுப் பூம்புகார் நகருக்கு அருகிலுள்ள தலைச்செங்காடு என்னும் ஊரில் வாழ்பவனும், நான்மறையும், ஆறங்கமும் நன்குணர்ந்தவனுமாகிய மாடலன் என்னும் அந்தணன், பாண்டிய நாட்டிலுள்ள பொதியமலையை வலம்வந்து, குமரித்தீர்த்தமாடிப்பல திருப்பதிகளையுங் கண்டுத் தன்னாடு நோக்கி மீண்டு வருங்காலை மதுரை நகர்ப் புறஞ்சேரியிலுள்ள முனிவரிருக்கையை யடைந்து தங்கினான்; கோவலன் அவனை முன்னமே நன்கறிந்தவனாகலின் சென்று அவனடியிற் பணிந்தான்; அந்தணன் கோவலனை நலமுண்டாக; எனவாழ்த்தி அவனிலைபைக் குறிப்பானுணர்ந்து, நீஇங்ஙனம் வருதற்குக்காரணம்யாது? எனவினவிப்பின் கூறுவான்; மாசாத்துவான்மகனே!

உருவப்பஃறே ரிளையோன் சிறுவன்
முருகற் சீற்றத் துருகெழு குரிசில்
இருபெரு வேந்தரு மொருகளத் தவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்றாட்.

கண்ணார் கண்ணிக் கரிகால் வளவனாகிய நமது சோழ பூபதிபால் வியக்கப்பெற்றுத் தலைக்கோலென்னும் பட்டமும் பெற்றமாதவிக்குப் பெண்மகவுதித்துப் பெயரிடும் நாள்வர கணிகைமார் கூடி அதற்குரிய சடங்குகளை மகிழ்வுடன் செய்து கொண்டிருக்கும் பொழுது, நீஅவர்களை நோக்கி முன்னாளில் எங்கள் குலப்பெரியாரொருவர் மரக்கலமேறிப் பொருள்தேடச் சென்றபோது இடைக்கடலில் மரக்கலம் உடைந்துபோக அவர்கடலில் நீந்திக்கொண்டு அலைகளால் மோதப்பெற்றுத் துயருழந்தனர்; அப்பொழுது அவ்விடத் தருகிலுள்ள ஒரு பெண் தெய்வம் அவர்முன் வந்து தோன்றி

வணிகப்பெரியோய்! நீவருந்தற்க; என்று சொல்லி அவரைக் கரையிற் சேர்ப்பித்து "யான் இத்தீவில் வாழ்பவர்கட்கு அரக்கர் களால் இடையூறு வாராமற்காக்குந் தெய்வம்; என்பெயர் மணிமேகலை; என்றுரைத்து மறைந்தது அந்நாள் முதல் எங்கள் குலப்பெரியார் யாவரும் வழிவழியாக அம்மணிமேகலையைக் குலதெய்வமாகப் போற்றிவருகின்றார்கள்; ஆகலின் இம்மகவுக்கு மணிமேகலை யென்றே பெயரிடுங்கள் எனக்கூற அவர்களும் அதற்கு இசைந்து அப்பெயரையே இட்டார்கள்; பின் மாதவியும் நீயும் இரப்போர்க்கு மழைபோலப் பொன்னை வாரியளித்தீர்கள்; அப்பொன்னை விரும்பிவந்த ஓர் முதுவேதியனை ஓர் மதயானை பிடித்துத் தூக்கியது; அதனைக்கண்ட நீமிக்கவிரைவுடனும், தைரியத்துடனுஞ் சென்று அந்தணனை மீட்டு யானையையும் அடக்கினாய். அதுவுமன்றிக் காவிரிப் பூம் பட்டினத்துப் பார்ப்பனி பொருத்தி தன் குழந்தையைத் தொட்டிலிற் கிடத்தி வெளியே சென்றிருந்தாள்; அவ்விடம் ஒரு கொடிய நாகம் வந்தது; அவ்வீட்டில் வளர்கின்ற கீரி அந்நாகம் குழந்தையை அணுகுமுன் அதனை இருதுண்டாகக் கடித்துக் கொன்று வெளியே ஓடிற்று; எதிரில் வந்த பார்ப்பனி கீரிசெய்த நன்றியை உணராமல், அது குழந்தையைக் கொன்றதாக நினைத்து அக்கீரியைக் கையிலிருந்த மணையாலடித்துக் கொன்றுவிட்டாள்; அதனையறிந்த அவள் கொழுநன் சிறிதும் ஆராய்ந்துபார்க்காமல் இக்கொடும் பழியைச் செய்த நின்னொடுங்கூடி இல்லறவாழ்க்கை நடத்துதல் இனித் தகாது; யான் கங்கையாடச் செல்கின்றேனென்று அவளைப் பிரிந்து சென்றான். பார்ப்பனியும் பின் தொடர்ந்தாள்; அந்தணன் ஒரு ஓலை யெழுதி அவள் கையிற் கொடுத்து, இதனை வடமொழிவல்ல அறிஞர் பாற்கொடுப்பாய், என்றறைந்து போயினான். பார்ப்பனி அவ்வோலையைப் பெற்று

மீண்டுவந்து இவ்வோலையைப் பெற்று என்பாவந் தொலைப்பா ருளரோ, எனக்கூவிக்கொண்டு வீதி தோறுஞ் சென்றாள். அதனையறிந்த நீ அவ்வோலையை வாங்கிப்படித்து நிகழ்ந்ததை வினவியறிந்து, அவளது கொலைப்பாவந் தீர்தற்குரியதானங் களைச் செய்வித்து, அவளது மனக்கவலையைமாற்றி, வெறுத்துச் சென்ற வேதியனையும் அழைப்பித்து, அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பொருளும் கொடுத்து அவ்விருவரும் ஒற்றுமையாக வாழும்படிச் செய்தாய்; அன்றியும் வேறொரு நாள் ஒரு மூடன் கற்பிற்சிறந்த ஒரு உத்தமியின்மீது பொய்யான பழிமொழிகளை அவள் கணவனிடங்கூற, அப்பாவச் செய்கையைக் கண்டு அறநெறிவழுவினவர்களைப் புடைத்துண்ணுஞ் சதுக்கப்பூதம் அவனைத் தன் பாசத்தாற் கட்டியிழுத்தது; அதைக்கண்டதாய் "ஐயோ! என் ஒருமகனையும் இழந்தேனே, என்றலறக்கண்ட நீவிரைந்து சென்று அப்பாசத்திற் சிக்குண்டு, ஏ! பூதநாத! இவனுயிர்க்கு ஈடாகஎன்னுயிரைக்கொண்டு இவனைவிடுவாய், எனவேண்டியும், அப்பூதம் அவனையே புடைத்துண்டது; அதனால் வருந்திய அவன் சுற்றத்தார்க்கு உண்டியும் உடையுமளித்து நெடுநாள் பாதுகாத்தனை;

கோவல! இம்மையில் நீ இயற்றிய வெல்லாம் அறவினையாகக் கண்டேனேயன்றி சிறிதும் பிழை புரியக்கண்டிலேன்; அங்ஙனமாகவும் இத்திருத்தகு மாமணிக்கொழுந்துடன் தனியே வந்து இத்துன்பமுறும்படி முன்செய்த தீவினையாதோ? என்றான். அப்பொழுது கோவலன் அந்தணனைநோக்கி, ஐய! இன்று இரவு விடியற்காலையில் ஒரு கனக்கண்டேன்; என்னையெனில், இக்கண்ணகி மிகத்துயரமெய்தும்படி யானணிந்திருந்த ஆடையைப்பிறர் கவர்ந்தனர்; பின்னர் பன்றியின் மேல் ஏறினேன்; அப்பால் கண்ணகியும் நானும் தவஞ் செய்

யும் பெரியோர் எய்துதற்கரிய பேறெய்தினேம்; மாதவி தன்மகள் மணிமேகலையைப் புத்தர்களிடம் ஒப்புவித்தாள்; என்பதே; இதனால் எனக்கு ஏதோ தீங்கு நிகழுமெனத் தோன்றுகின்ற தென்றான் அம்மொழிகேட்ட மாடலனும் கவுந்திபடிகளும் கோவலனை நோக்கி இவ்விடம், தவஞ்செய்யும் வாழ்க்கை மேற்கொண்ட துறவிகளுக்கேயன்றி இல்வாழ்க்கு உரியதன்று; நீஉன் மனைவியுடன் மதுரைக்குச்சென்று உன்னை மாசாத்துவான் மகனென்றறிவிப்பாயானால் அந்நகர் வாணிகர் அன்புடன் ஏற்று உங்களைப் போற்றுவார்கள்; பொழுது கழியுமுன் நகருட் செல்க என்றார்கள்.

7, கவுந்தியடிகள் மாதரியிடங் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்தல்.

இவ்வாறு சொல்லிக் கொண்டிருக்கும்போதே, அம்மதுரை நகரின் ஆயர்பாடியில் வாழ்பவளும், மனத்தூய்மையும், வாய்மையு முடையவளும். பசுநிரை யோம்பி அதனால் வரும் பயனை அனைவர்க்கும் பகிர்ந்து கொடுக்குமியல் புடையவளும், இடைச்சியர் தலைவியுமாகிய மாதரி என்பவள் ஆரியாங்கனை யென்னும் இயக்கிக்குப் பாலன்னம் படைத்து வரும் வழியில் இப்புறஞ் சேரியையடைந்து கவுந்தியடிகளைக்கண்டு வணங்கினாள். கவுந்தியடிகள் மாதரியை வாழ்த்தி, அவள் தூய்மைமுதலிய குணங்களை நினைத்துக் கண்ணகியை இவளிடம் ஒப்புவித்தால் யாதொரு தீங்கும் நேராமற் காப்பாளெனக்கொண்டு, மாதரி! இம்மயிலியலும், இம்மைந்தனும் சோழவளநாட்டுக் காவிரிப்பூம் பட்டினத்துப் பெருஞ்செல்வ நிறைந்தவணிகர் குலத்தவர்கள்; இம்மங்கையின் கொழுநனே இவன்; இவன் மாசாத்துவான் மைந்தனென்பதை மதுரை

நகர் வாணிகர் அறிவார்களாயின் இவளையும் இவள் மனைவி யையும் எதிர் கொண்டு இல்லத்திற் கொண்டு போற்றுவார்கள்; அதுவரையில் நீ இப்பெண்மணியை அடைக்கலமாகக் கொண்டு காப்பாற்றுக; நீ இப்பெண்மணியை உடன் கொண்டு சென்று வாச நீராட்டி, கண்ணுக்கு மையெழுதி மெல்லிய கூந்தலுக்கு மலர் புனைந்து, தூய ஆடையுடுத்தி, செயத்தகு வன அனைத்துஞ்செய்து தாய் போற் புரப்பாய்; என்றுரைத்து மீண்டும் இத்திருமகள் பஞ்சினு மெல்லிய பாதங்களையுடைய வளாயிருந்தும், இக்கொடுநெறியில் கல்லும் முள்ளும் காலில் உறுத்தவும், வெயில் மேலே உறைக்கவும், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தன் கணவன் பெய்தொடிய சென்ற கவ லையே பெரிதும் உடையவளாய் அவனுடன் வந்தகற்பரசியா வாள்; தங்கணவருக்கு இன்றியமையாத கற்பைக் கடனாகப் பூண்ட இத்தெய்வமல்லது வேறுதெய்வங்களை யாம் கண்டி லேம்; மேலும் பத்தினிப்பெண்டிர்வாழும்நாடு "வானம் பொய் யாது வளம்பிழைப்பறியாது. நீணில வேந்தர் கொற்றஞ்சிதை யாது என்பதை நீ அறியாயோ? மேலும் தவமுடையோராற்" கொடுக்கப்படும் அடைக்கலப்பொருள் சிறிதாயினும் பேரின்ப மளிப்பதாகும்; என்று அதற்கு ஓர் கதை கூறுவார்:—மாதரீ! கேள்! முன்னொருகாலத்திற் காவிரிப்பூம்பட்டினத்தில் பிண்டி மரநிழலில் சாவகரால் அமைக்கப்பட்ட சிலாதலத்திலிருந்து சாரணர்கள் சாவகருக்கு அறநூற்பொருளை உபதேசஞ்செய்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது அழகிய உருவும், ஒளியு முடைய ஒரு வானவன் அவ்விடம் வந்தான்; அவன்கைகளில் ஒன்று குரங்கின்கையாக இருந்தது; அதைக்கண்ட சாவகர்கள் வியந்து சாரணரை நோக்கி இவ்வானவன் யாவன்? இவனது

கை குரங்கின் கைபோலிருப்பதற்குக் காரணம் யாதென வினவினர்.

அதைக்கேட்ட சாரணன் கூறுவான்:—சாவகர்களே! இந்நகரில் வணிகர் குலத்துதித்து அரசனால் நன்குமதிக்கப் பெற்று எட்டி என்னும் பட்டமும்பெற்ற சாயலன் என்பவன் ஒருவனிருந்தான். ஒருநாள் அவன் மனைவி தன்வீட்டுக்கு வந்த ஒருதவமுதல்வனை முறைப்படி உபசரித்து அறுசுவை யுண்டியளித்துப் போற்றினள்; அப்பெரியார் உணவு கொண் டருளும்போது, ஊர் ஜனங்களால் துரத்தப்பட்டுச் சோறு கிடைக்காமற் பலவிடங்களிலும் அலைந்து திரிந்த கருங்குரங் கொன்று அவ்வீட்டை யடைந்து அச்சத்துடன் அம்முனிவர் உண்ட மிகுதியையுண்டு அவர்கைகழுவிய நீரையும் அருந்தித் தன்பசி தணிந்து, தன் வறுமைப் பிணியைக் குறிப்பிப்பது போல அவரது மலர்ந்த முகத்தைநோக்கி நின்றது; முனிவர் அக்குரங்கின் எளிமைக்கிரங்கி, அவ்வீட்டுக்குரிய நல்லாளைப் பார்த்து, "நீ உன்மக்களோடொப்ப இதனையும் போற்றுவாய்" என்று கட்டளையிட்டுச் சென்றார். பெரியோராணை கடவாத வணிகர் பெருமாட்டியும் அன்றுமுதல் அக்குரங்கை வளர்த்து வந்தாள்; சிலநாள்கழித்து அக்குரங்கு இறந்தது; அப் பொழுது அம்மாது "இக்குரங்கின்இழிபிறப்பொழிக" எனக் கூறிச்சிலபொன்னைத் தக்கார்க்கு உவகையோடளித்தாள்; அத் தானத்தின்பயனால் அக்குரங்கு மத்தியதேசத்து வாரணசிப் பதியில் அரசாண்ட உத்தரகௌத்தன் என்பவனுக்கு மகனா கப்பிறந்து தந்தை யிறந்தபின் முப்பத்திரண்டு ஆண்டுகள் செங்கோல்செலுத்தி பலவகைத்தானங்களுஞ்செய்து, பின் இத்தேவ உருவம் பெற்றது. அக்குரங்கே இத்தேவ குமா ரன்; சாயலன் மனையாள் தன்பொருட்டுச் செய்ததானத்தின் பயனே பின் தானடைந்த நலங்களுக்கெல்லாங் காரணமாயிரு

ந்கமென்பதை யாவருமறியும்பொருட்டே தன்னுருவின் ஒரு சிறுபாகம் குரங்கு வடிவாகப்பெற்று விளங்குகின்றான்; முனிவர் மொழிப்படி அக்குரங்கை அடைக்கலமாகக்கொண்டு வளர்த்தசாயலனும், அவன்மனைவியும் என்றுமழியாப்பேரின்ப மெய்தினார்கள்; நீயும் இக்கற்பரசியைப் பொழுதுசெல்வதற்குள் இல்லங்கொண்டு செல்க; என்று விடைகொடுத்தாள். அந்நன்மொழிகளைச் செவியுற்றமாதரி கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக்கொண்டு ஆயர்பாடியை யடைந்தாள். போகும்வழியில் பசு நிரைகாக்கும் ஆயர்களும், பால் சுமந்து செல்லும் இடைச்சியர்களும் கோவலன் கண்ணகியென்னு மிருவருடைய அழகைக்கண்டு வியந்தார்கள்; இடைச்சியர் பலர் பின் தொடரத்தன்மனைபுகுந்தமாதரி, தனது வீட்டிற்கு அருகில் புதிதாகக்கட்டப்பட்டு நாற்புறமும் வேலி சூழப்பெற்ற ஓர் புதுமனையில் அவர்களை இருத்தி, அன்னாய் "நீ உனக்குற்றதுணையின் றெனக்கவலை கொள்ளாதொழிக; இவள் என்மகள் ஐயை; உன்னைப்பிரியாது உனக்கு வேண்டிய பணிபுரிவாள்" என்றாள். பின்னர்த் தங்கள் இடைக்குல மங்கையர் பலர்சூழக் கண்ணகியை வாசநீராட்டிப், புனைவன புனைந்து; சமைப்பதற்கு வேண்டிய பொருள்களையும் புதுமண் பாண்டங்களையும் அனுப்பினாள்; கண்ணகி அவற்றைப்பெற்று ஐயையென்பவளின் உதவியால் தீமூட்டி உணவுப்பொருள்களை யெல்லாம் தனது கைத்திறனால் நன்கு சமைத்தாள். பின் கோவலனை அழைத்து ஆசனத் தமர்த்தி செந்நெலரிசியால் சமைத்த அமுதும், ஆவின்பாலும், நறு நெய்யும், பலாக்காயும், மாதுளங்கனியும், மாங்கனியும், வாழைக்கனியு முதலிய வற்றை முறைப்படி படைத்தனள் கோவலன் அமுது செய்தான். அக்காலத்து வெளியே நின்று பார்த்துக்கொண்டி

ருந்த மாதரியும் அவள்மகள் ஐயையும், அவர்களின் அழகை யும் மனத்தூய்மையையுங் கண்டு,

“ ஆயர் பாடியி னசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமு துண்ணு நம்பி யீங்குப்
பால்வளைத் தோளியும் பண்டு நங்குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குங் கொல் ”

எனப்பலவாறு புகழ்ந்து பேசினார்கள். கோவலன் அமுதுசெய்து முடித்தபின் கண்ணகி அடைக்காய்நல்கி அருகில் நின்றாள். அப்பொழுது கோவலன் கண்ணகியை யழைத்துத்தழுவி, “கொடிய வேனிற்காலத்தில், பால் நிறைந்த இக் காட்டுவழியில் பெருந்துயருற்று வந்த நம்மை நினைத்து நமது பெரியார் என்ன துன்பமுற்றாரோ? நாம் இத்துன்பமுற்றது கனவோ? அன்றி நனவாயின், இத்துணைத்தீமை யடையும்படி முன் செய்தீவினை யாதோ? யானேது மறிகிலேன்; வீணர்களோடும், புறங்கூறும் பாவிகளோடுங்கூடிப் பயனற்ற சொற்களைப் பேசுவதிலும், பயனின்றிநகைப்பதிலும், பொழுது போக்கினேன்; அதனால் இருமுது குரவர்க்கும், தொண்டு செய்யும் பேறும் இழந்தேன்; மேலோர் மொழிந்த அறவுரைகளையும் இனியவாகக்கொள்ளாது வெறுத்தேன்; நல்லறிவும் நற்குணமுடைய உனக்குஞ்சிறுமை செய்தேன்; இவையெல்லாந்தீமை தருவனவெனக்கனவிலுங் கருதா தொழிந்தேன்; இவ்வாறிருந்தும் உன்னை நான் என்னுடன் வருக” என்றழைத்தபோது, எதிர்மொழி யொன்றும்பகராது உடன் போந்தனை; அதனாற்பல இன்னலுற்றாய்” என்றிரங்கினான். அதைக் கேட்ட கண்ணகி, காதல! “உமது போற்றா ஒழுக்கத்தால்

இல்லொழுக்கைக்குரிய அறவோர்க்களித்தல், அந்தணரோம்பல், துறவோர்க்கெதிர்தல் விருந்தினர்ப் பேணல் முதலிய கடமைகளை யெல்லாம் இழந்தேனாயினும், உமது ஆணையின் வழுவாதொழுகக் கடமைப் பட்டேனாகலின், உம்முடன் வந்தேன்" என்றாள். கோவலன் அங்ஙனமுரைத்த பொற்கொடியைத் தழுவி

குடிமுதற் சுற்றமுங் குற்றிளை யோரும்
அடியோர் பாங்கும் ஆயமும் நீக்கி
நாணமுமடனு நல்லோ ரேத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னொடு போந்திங் கென்றுயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி!

இனி "உன் காற்சிலம்பிலொன்றைக் கொண்டுபோய் விற்று வருகின்றேன்; வருமளவுந் தனிமையால் மயங்காதொழிக" என்று மீண்டுந்தழுவி, அவளைத்தனிமையாக விட்டுப்பிரிதலை நினைத்து உளம் வெதும்பிக் கண்களில் நீர்பெருக, அக்கண்ணீரை அவள் கண்டால் இன்னும் வருந்துவளே யென்று மறைத்துக்கொண்டே ஆயர்பாடியைக்கடந்து அகநகர்க்குட் போயினன்; அன்று பிரிந்த கோவலனைக் கண்ணகி மீண்டும் உயிருடன் கண்டிலள்; நிற்க. கோவலன் செல்லும் போது ஓர் எருது அவனை நோக்கிப் பாய்ந்தது; இடையர்களுக்கு அது தீய சகுனமென்று தெரியும்; கோவலன் அதை யறியானாகலின் கவனிக்காமலே சென்றான். பலவீதிகளையுங் கடந்து, கடைவீதி வழியாகச் செல்லும் பொழுது, உருக்குத் தட்டாரும் பணித்தட்டாருமாகிய நூறு பொற்கொல்லர் பின்

னேவர, அரசனிடம் பெற்ற வரிசையோடும், கைக்கோலுடனும் ஒதுங்கி நடந்து எதிரேவந்த ஒரு பொற்கொல்லனைக்கண்டு," அரசமாதேவி அணிதற்குரிய சிலம் பொன்று என்னிடம் உளது; நீ அதனை விலை மதிப்பாயோ! என்றான். தட்டான் கோவலனை வணங்கி, "மடந்தையர் காலினணியுஞ் சிலப்பை விலை மதிக்கயானறியேன்; மன்னவர் முடியிலணியும் அணி கலன் சமைச்செய்யும் ஆற்றலுடையேன்" என்றான் அம் மொழிகேட்ட கோவலன் சிலப்பை அவனிடங்காட்டினான். பொற்கொல்லன் அச்சிலம்பின் வேலைத்திறமையைக்கண்டு,முன் அரண்மனையில் தான் திருடிக்கொண்டு வந்த சிலம்போடு இது ஒப்புமையுடைத் தாதலின், தான் திருடியதை அரசனறியு முன்னமே, இச்சிலம்பே அரண்மனையிற் களவு போயதென்று ரைத்தால் தன் மேலுள்ள ஐயம் நீங்கிவிடும்; என்று தன் மனத்துள் துணிந்து கோவலனை நோக்கி, இச்சிலம்பு அரசன் தேவிக்கு ஆகுமேயன்றி மற்றையோர்க்கு ஆகாது; நான் இதோ சென்று அரசனுக்குரைத்துவருகின்றேன்; அதுவரை யில் இவ்விடத்திலேயே இருப்பாயாக; என்றுரைத்து ஆங் கொரு குடிசையைக்காட்டி விரைந்து சென்றான். போகும் போது "எனது நற்காலமே இவனை என்னிடஞ் சேர்த்தது; நான் சிலப்பைத் திருடியதை நமதரசர் அறிவாராயின் என் கதியாது? இனி எவ்வாறேனும் இவனை திருடனென்று மன்னன் துணியும்படி செய்து விடல் வேண்டும்" என்று சிந்தித்துக் கொண்டே மாளிகையை யடைந்தான்.

அப்பொழுது, பாண்டியன் நெடுஞ் செழியன், அந்நகர் நாடகக்கணிகை பொருத்தியின் அழகிலும், ஆடல், பாடலி லும் ஈடுபட்டு அவளைக்காதலித்தமையால், அதனையறிந்து தன்னிடம் ஊடல் கொண்ட தேவியை ஊடல் தணித்து மகிழ்

விக்குமாறு தன் கோயிலை நீங்கி அவள் கோயிலை நோக்கி விரைந்து சென்றான். அச்சமயம் பொற் கொல்லன் சென்று அடிபணிந்து, அரசே! கன்னக்கோல் முதலியகருவிகள் ஒன்று மின்றி தான்பயின்ற மந்திரமே துணையாகக் கொண்டு, வாயில் காவலரை மயக்கி, உள்ளே நுழைந்து, கோயிலின்கணிருந்த சிலம்பைத் திருடியவன் அச்சிலம்போடு அடியேன் குடிசைக் குள் இருக்கின்றான்; என்றான். பாண்டியன் அதுகேட்டு காவலாளரையழைத்து, "எனது தேவியணியுஞ் சிலம்பு இவன் கூறிய கள்வன் கைபிடத்ததாயின், அவனைக்கொல்லு தற்கு அச்சிலம்புடன் கொண்டுவருக, எனக்கூற நினைத்தவன் வினைவிளைகின்ற காலம் வந்தமையால் சிறிதுந் தோராணுகிக்கள் ளனைக்கொன்று சிலம்பினை இவளுடல் தீர்த்தற்கு உதவியாக இங்கே கொணர்க" என்றுரைத்தான். உடனே காவலாளரு டன் பொற்கொல்லன் கோவலனிருக்குமிடத்தை யடைந்து அவனை அவர்களுக்குக் காட்டி, கோவலனை நோக்கி "இவர்கள் அரசன் ஆணையாற் சிலம்புகாண வந்தவர்களென்று சொல்லி அச்சிலம்பினை அவர்களுக்குக்காட்டி அதன் இலக்கணங்களை உரைப்பவன் போலப் பொய்யாக நடித்துப்பின் அவர்களைத் தனியேயழைத்துச் சென்று அரசனாணையையும் தன் கருத் தையும் வெளியிட்டு உங்கள் கடமையை விரைவிற் செய்யுங் கள்; என்றான். காவளாளர் கோவலனுடைய முகக்குறிமுதலிய வற்றை உற்றுநோக்கி அவன்கள்வனல்லனெனத்துணிவு கொண்டு, பொற்கொல்லனை நோக்கி " இவன் கள்வனல்லன்; இவன் கொலை செயற்பாலனு மல்லன் " என மறுத்தனர் பொற்கொல்லன் மீண்டுங் காவலாளரை நோக்கிக் களவுநூலில் உள்ளமுறையை உரைக்கத் தொடங்கி" தீயொழுக்கத்தாற் களவு செய்துண்போர் மந்திர முதலிய எட்டையுந் துணையா கக் கொண்டு திரிவார்கள்; நீங்கள் இவன் வலியை யழித்துத்

தப்புவதன்றி இவன் மருந்திற் பட்டீராயின், அரசனுற் பெருந் தண்டமடைவீர்கள்; இது துணிபு; இன்னும் இத்தகைய கள்வர், தாங்கள் பழகிய மந்திரங்களை நாவாலோதுவார்களாயின் தேவர்களைப்போல நமது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து போவார்கள்; தங்கள் தெய்வத்தை மனத்தில் நினைப்பார்களாயின், தங்கள் கையிலகப்பட்ட பொருளை நம்மிடங்காட்டியும் தப்பி ஓடிவிடுவார்கள்; மருந்தால் மயக்குவாராயின் நாம் இருந்த விடத்தைவிட்டுப் பெயர்தலுமாகாது; கிடைப்பதற்கரிய பொருள் கிடைப்பதாயினும் நன்னிமித்தங் கண்டாலன்றித் திருடப்போகமாட்டார்கள் அக்களவு நூலிற் கைதேர்ந்தவராயின், இந்திரன் அணிந்த மாலையாயினும் எளிதாகக் கொணர்வர்; இது தக்க இடமென்றறிவார்களாயின், எவர் கண்ணிலும் அகப்படாமல் அவ்விடமெய்துவார்;இது தக்ககாலமென்று ஒருபொருளைக் கைப்பற்றிவிடுவாராயின் மேலோராயினும் தடுக்கற்பாலரல்லர்; கருவியைக் கொண்டு ஒருபொருளைக் கைப்பற்றிவிடுவாராயின், எவர்தான் அதைக்காண்பார். அவர்கட்கு இரவுமில்லை; பகலுமில்லை; மனிதர்கள் உள்ள இடங்களெல்லாம் அவர்களுக்கும் இடமே" என்று விளங்க உரைத்தான்.

வஞ்சகப் பொற்கொல்லன் கூறியவற்றைக் கேட்ட காவலாளரிற் பழிக்கஞ்சாத ஒரு மூடன் சிறிதும் ஆராய்ச்சியும் அச்சமுமின்றி அரசன் ஆணையை நிறைவேற்றினன். அந்தோ! கோவலன் மேனி இருதுண்டாகக் கீழே விழுந்தது.

நண்ணு மிருவினையு நண்ணுமின்க ணல்லறமே
கண்ணகி தன் கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை.

ஆய்ச்சியர் குரவை.

சிலம்பு விற்கச்சென்ற கோவலன் நிலை இவ்வாருக; இமய மலையின்மீது தன் கயற் கொடி நாட்டியவனும், ஏனைய முடி தரித்த மன்னரும் குறுநில மன்னரும் தன்னடிவணங்க வெண் கொற்றக்குடையும், நவமணிமுடியுஞ் சிங்காதனமுங் கொண்டு உலகெலாம் புரக்கும் ஒருபெரு வேந்தனுமாகிய பாண்டியன் நெடுஞ் செழியனது அரண்மனையில் வழக்கமாக ஒலிக்குங் காலை முரசொலியைக் கேட்டாள் ஆயர்குலத்தலைவி மாதரி. அன்று அரண்மனைக்கு நெய்யளந்து கொடுக்கு முறையாக லின் அப்பொழுதே எழுந்து தனது காலைக்கடன்களை முடித்துத் தன் மகள் ஐயையுடன் கடைகயிறும் மத்தும் எடுத்துக்கொண்டு தயிர் கடையச் சென்ருள்; தயிர்த்தாழியிற் பால் உறையாதிருக்கக்கண்டாள்; பின் தொழுவத்திற்குச் சென்ருள்; ஏற்றின் கண்களிலிருந்து நீர் சொரிந்தன; பசுக் களின் கழுத்துமணிகள் அறுந்து விழுந்தன; மேலும் அவை மெய்ந்நடுங்கி அரற்றின; ஆட்டுக்குட்டிகள் துள்ளிவிளையாடா மற் சோர்ந்து கிடந்தன; முகனுள் வெண்ணெயும் உருகா தொழிந்தது; இவற்றை யெல்லாம் பார்த்த மாதரி, தன்மகள் ஐயையை நோக்கி "மகளே! இத்தீயகுறிகளால் நமக்கு ஏதோ துன்பம் வருமென்று தோன்றுகின்றது; ஆயினும் இவற்ருல் நீ சிறு கவலையுங் கொள்ளற்க; முன்பு ஆயர்பாடியில் எரு மன்றத்து மாயவன் பலராமனேடு ஆடிய பல நாடகங்கள் உள்ளன; அவற்றுள் வேற்கண்ணுள் பின்னை யோடாடிய குர வைக் கூத்தினை மாதர்க்கணியாங் கண்ணகியுங்காண இன்று ஆடுவோமாக; இக்கன்றுகளும், மறிகளும், பசுக்களும் இன்ப மெய்துக" என்று சொல்லித் தேற்றினுள்.

மாதரியின் மொழிப்படியே ஆயர்குல மகளிரும் ஐயை யுடன் கூடித் தங்கள் வழிபடு தெய்வமாகிய திருமாலை,

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக் [யே
கடல் வண்ணன்! பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினை
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றாற் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய்! மாயமோ மருட்கைத்தே.

திரண்டமரர் தொழுதேத்துந் திருமால்! நின் செங்கமல
இரண்டடியான் மூவுலகு மிருடீர நடந்தனையே
நடந்தவடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தவடி
மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ மருட்கைத்தே.

மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான் போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணுங்
திருவடியுங் கையுந் திருவாயுஞ் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

எனத்துதித்தும், பாண்டியன் முரசம் என்றும் வெற்றி யுடன்ஒலிப்பதாக என மன்னனை வாழ்த்தியும் குரவைக் கூத்தினை முடித்தனர்.

9 கண்ணகி துயரம்.

இங்ஙனமாடிய குரவைக்கூத்து முடிந்தவளவில் மாதரியும் ஏனைய மகளிரும் இடையறுது நீர் வளஞ் சுரக்கும் வையை நதிக்கரையை யடைந்து, ஆங்குத் திருமாலை மலர் முதலியவற்றைத் தூவி வழிபடுதற்கு அந்நதியில் நீராடச்சென்ருள். அக்காலத்து உள்நகரிலிருந்து வந்த ஓர் ஆயர்குலமாது மதுரையினடந்த கொடுஞ் செயலை அறிந்தனளாகலின், அதை மாதரிக்குணர்த்துமாறு விரைந்தணுகினுள்; அவ்வளவிற் கண்ணகியும் அருகிருக்கக்கண்டாள்; தான் அறிந்த கொடுஞ் செயலைத் திடீரெனக்கூற அஞ்சி ஒதுங்கினுள்; அயலின் நின்ற தங்கள் மரபிற்குரிய ஓர் பெண் மணியிடங் கண்ணகியைக் குறிப்பாற் காட்டி நடந்தவற்றை உரைத்தாள்; கண்ணகி அக்குறிப்பினையறிந்து அவளிடஞ் சென்று நீ என்னைப்பற்றி ஏதோ பேசியதாக அறிந்தேன்; அஃதியாது என்ருள்; அவள் தன்னெதிரே பூங்கொம்பு போலநிற்குங் கண்ணகியின் அழகையும், இளமையையும், தனிமையையுங்கண்டு நெஞ்சழிந்து நாவெழாமல் மெய்ந்நடுங்கி வாய்புதைத்து ஒன்றுஞ் சொல்லாது நின்ருள். கண்ணகி, அவள் நிலையையறிந்து, அவள் வாய்திறந்து கூருளாயினும் ஏதோசொல்ல முடியாத்துயர் விளைந்ததெனக்கருதி, "தோழி! மதுரைக்குச் சென்ற என் காதலன் இன்னும் வரக்காணேன்; ஏதோ வஞ்சகம் நடந்திருக்கின்றது; உலைக்களத்திலிருந்தும் ஊதுகின்ற துருத்தி யாயினும் விரைவாக எனக்குப்பெருமூச் செழுகின்றது; இவர் பேசியமறைமொழி எளிதன்று; அதற்குத்தக என் தலைவனும் இன்னும் வரக்காணேன்; என்மனம் மறுகுகின்றது; இவர் குறிப்பு இன்னதென்றறிகிலேன்" என்றிரங்கினுள்.

இவளிரங்கியதைக் கண்ட அம்மாது, "இனிநாம் மறைத்து ஆவதென்? எப்படியும் இவள் அறிந்தே தீருவாள்; மறைப்ப

தாற் பயனில்லை என்று நினைத்துக் கண்ணகியைப்பார்த்து, "நின்கொழுநனைச் சிலம்பு திருடியவனென்று அரசன் ஏவலாற் காவலாளர் வெட்டி வீழ்த்தினர்" என்றாள்; எங்ஙனஞ் சகிப்பாள்! தாய் தந்தையரையும், மாமன் மாமியரையும், உற்றார் உறவினரையும் ஒரு பொருட்டாக எண்ணாமற் காதலனடி நிழல் வாழ்வே பேரின்ப மெனக்கொண்டு, யாமத்தில் நகர் துறந்து எய்தரிய துன்பங்களை எய்தி மதுரையையடைந்த எனது வாழ்வு இவ்வளவோ! என்று வேரற்றமரம் போல நிலத்தில் விழுந்து புரண்டாள்; மூர்ச்சையடைந்தாள்; சற்று நேரங் கழித்து எழுந்தாள்; கையால் முகத்திலறைந்து கொண்டாள்;

இன்புறு தங்கணவ ரிடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப் போல்
மன்பதை யலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யா னவலங் கொண்டழிவலோ!

நறைமலி வியன்மார்பி னன்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனு மடவோயான் அவலங் கொண்டழிவலோ!

தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துறைமூழ்குங் கவலைய மகளிரைப்போல்
செம்மையி னிகந்தசொற் றென்னவன் றவறிழைப்ப
இம்மையு மிசைபொரீஇ யினைந்தேங்கி யழிவலோ.

எனப்புலம்பினள்! பின் ஆங்குத் திருமாலை வழிபடுதற்குத் திரண்ட ஆயர்குல மாதர்களை அழைத்து நீங்கள் கேளுங்க ளென்று சொல்லிக், கதிர்ச் செல்வனை நோக்கி, "காய்

கதிர்ச் செல்வனே! நீயறிய என் கணவன் கள்வனோ" என்றாள். அப்பொழுது அனைவருங்கேட்க "நானறிய நின்கணவன் கள்வனல்லன்; அவனைக்கள்வனென்ற இவ்வூரை விரைவில் தீப்பற்றி அழிக்கும்" என்றோரசரீரி தோன்றியது. உடனே மற்றொரு சிலம்பைக் கையிலேந்தி மதுரையின் அகநகரை நோக்கி விரைந்து சென்றாள்.

---

10. கண்ணகி கோவலனைக் காணல்.

செல்லும் பொழுது அந்நகர் மகளிரைவிளித்து,
முறையி லரசன்ற னூரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈதொன்று
பட்டேன் படாத துயரம் படுகாலை
உற்றே னுறாத துறவனே யீதொன்று
கள்வனே யல்லன் கணவனென் காற்சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டாற் கொன்றாரே ஈதொன்று
மாதர்த் தகைய மடவார்கள் முன்னரே
காதற் கணவனைக் காண்பனே ஈதொன்று
காதற் கணவனைக் கண்டா லவன் வாயிற்
தீதறு நல்லுரை கேட்பனே ஈதொன்று
தீதறு நல்லுரை கேளா தொழிவனேல்
நோதக்க செய்தாளென் றெள்ளல்; இதுவொன்று

77029

என்றுசொல்லிப் புலம்பிக் கொண்டே விரைந்து சென்றாள். தனியாகப் புலம்பிக்கொண்டு வீதிவழியாகச் செல்லும் கண்ணகியின் நிலையைக் கண்ட மதுரைமா நகரத்தாருள், சிலர், இறக்குமளவும் நீங்காத துயரத்தை இப்மாதரசிக்குச் செய்து என்றுங் கோடாப் பாண்டியன் செங்கோலும் வளைந்த

தே; இதனால் யாது விளையுமோ? என்றார். வேறு சிலர், "மதி போலுங் குடையையுடைய பன்னர் மன்னனாகிய வழுதியின் செங்கோல் அழிந்தது; உலகத்திற்கு அறத்தையும் பகைவர்க்கு மறத்தையும் புரியும் வேற்படை தாங்கிய பாண்டியனுடைய தண்மையைச் செய்யுங் குடையும் வெம்மையை விளைத்தது' என்றார். இன்னுஞ் சிலர் செம்பொன்னாற்செய்த சிலம் பொன்றினைக் கையிலேந்திய இத்தெய்வம் துன்பக்குறியுடன் நமது நகருள் வந்து தோன்றியதே! இதனால்விளையும் இன்னல் யாதோ? என்றார்.

மற்றுஞ் சிலர்; அரிபரந்த கண்களையுடைய இம்மாது தெய்வ ஆவேசங் கொண்டவள்போல அரற்றுகின்றனளே! இது யாது விளைக்குமோ என்றார். இங்ஙனம் பலர் பலவாறுரைத்து அவள் நிலைமைக்கு இரங்கினார்கள். அரசன் செங்கோல் வழுவிய செய்தி நகரமுழுதும் பரவியது; கதிரோனும் மேற்றிசையில் மறையும் மாலைக்காலம் அணுகியது; அப்பொழுது நகரமக்களிற் சிலர் கண்ணகியைப்பின் தொடர்ந்து சென்று அவள்கணவன் வெட்டப்பட்டுக்கிடக்கு மிடத்தைக் காட்டினார்கள்; உடம்பெலாம் உதிர மொழுகப் பூமியிற் கிடக்கும் காதற் கொழுநனைக் கண்டாள் கண்ணகி. தான் அவனைக் கண்டுந் தன்னையவன் காணப்பெறா நிலைமையெய்தியது கண்டு கலங்கினாள்; கண்ணீர் சொரிந்தாள்; அவன் மேனியில் விழுந்து புரண்டாள்; பூங்கொடிபோலத் துவண்டு நின்றாள்! "அருயிர்க்கணவ! சிலம்பினை விற்று வரும் வரையில் தனிமை யான் வருந்துதலை யொழிவாய், எனத்தேற்றிச் சென்ற நீர், இன்று என் தனிமையைக் கண்டும் இரங்காதொழிந்த தென்னே," என்றாள்; கண்ணின் மணியனையீர்! இந்தக் கோலங் காண்பதற்கோ புகார் நகரினின்றும் போந்தேன்; என்றாள் என் தெய்வமே! பொன்னரியாலை யணிந்து திகழும் உமது

மார்பு புழுதியிற் படிந்து கிடக்கின்றதே! இதனைக்காண யான் என்ன பாவஞ் செய்தேனோ! என்றாள், இத்தகைய தீமை நிகழ முன்செய்த வெவ்வினை இதுவென்றுரைப்பார் இந்நகரில் யாருமிலரோ! என்றாள்; பின்னும்,

பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்
கொண்ட கொழுநருற்றுறை தாங்குறாஉம்
பெண்டிரு முண்டுகொல் பெண்டிரு முண்டுகொல்

சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்
ஈன்ற குழவி யெடுத்து வளர்க்குறாஉஞ்
சான்றோரு முண்டுகொல் சான்றோரு முண்டுகொல்

தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்
வைவாளிற் றப்பிய பண்ணவன் கூடலில்
தெய்வமு முண்டுகொல் தெய்வமு முண்டுகொல்.

என்றழுது கொண்டே அவனது மார்பைத் தழுவிக் கொண்டாள்; அவ்வளவில் அவன் உயிர் பெற்றெழுந்து நின்று நிறைமதிபோன்ற நின்முகம் ஒளிமழுங்கியதே, என்று சொல்லி அவள் கண்ணீரைத் தன்கையால் மாற்றினன்! கண்ணகியுந் தன் காதலனடியிற் பணிந்து அவனடிகளை இருகரங்களாலும் பற்றிக் கொண்டாள்; அவன் கண்ணகியைப்பார்த்து "நீ இங்கிருக்க" என்றுரைத்துத் தெய்வ வுலகத்தையடைந்தான். கண்ணகியும்,

மாயங்கொல் மற்றென்கொல் மருட்டியதோர் தெய்வங் [கொல்
போயெங்கு நாடுகேன் பொருளுரையோ இதுவன்று
காய்சினந் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் றனைக்கண்டித் திறங்கேட்பல் யானென்றாள்

என்று ளெழுந்தான் இடருற்ற தீக்கனா
நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கண் நீர் சோர
நின்றாள் நினைந்தாள் நெடுங்கயற்கணீர் துடையாச்
சென்று ளரசன் செழுங்கோயில் வாயின் முன்

---

11. கண்ணகி மன்னனைக் கண்டு வழக்குரைத்தல்.

எவ்வாறாயினும் என் கணவனைத்தேடி அவனிருக்கு மிடத்தை யடைவேன்; ஆயினும் இன்று பெருங் கோபத்தின் வசப்பட்டிருக்கின்றேன்; இக்கோபந்தணிந்தன்றி இந்நகர் விட்டுப் போகேன்; அஃதகலுமாறு இக்கொடுங்கோல் வழுதியை நாடி என்கணவனைக் கொன்றதற்குக் காரணம் யாதென வினவுவேன்; என்று சொல்லிக்கொண்டே தான்கண்ட தீக்கனாவை நினைந்து நின்றாள். பின் தன்கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, மன்னவன் கோயில் வாயிலை யடைந்தாள் கோப் பெருந்தேவி அச்சமயத்திற் பாண்டியன் நெடுஞ் செழியனுடைய செங்கோலும் வெண்குடையும் சாயவும், அரண்மனை வாயில் ஆராய்ச்சிமணி தானே யொலிக்கவும், சூரியனை இருள் விழுங்கவும், எட்டுத்திசைகளும் அதிர்ந்திடவும், இராக்காலத்தே வானவில் தோன்றவும். பகற்காலத்தே விண்மீன்கள் உதிரவும் கனாக்கண்டமையின், தன் தோழியை யழைத்துத் தான்கண்ட கனவை உரைத்து, இக்கனா நிகழ்ச்சியால் நமக்கு ஏதோ துன்பம் வருமென்று தோன்றுகின்றமையின் இப்பொழுதே சென்று மன்னனுக்குணர்த்த வேண்டுமென்று சென்றாள். தோழிமார்களும் "கோப்பெருந்தேவி வாழ்க" என்று சொல்லி,

ஆடிமேந்தினர் கலனேந்தின ரவிர்ந்து விளங்கு
மணியிழை யினர்

கோடி யேந்தினர் பட்டேந்தினர்
கொழுந் திரையலின் செப்பேந்தினர்
வண்ண மேந்தினர் சுண்ண மேந்தினர்
மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணி யேந்தினர் பிணைய லேந்தினர்
கவரி யேந்தினர் தூப மேந்தினர்களாய்.

உடன் தொடர்ந்து வரச் சென்று மன்னனை வணங்கித் தான் கண்ட கனு விணச் சொல்லிக் கொண்டே யிருந்தாள்; அரசனும் அரியணையில் சிறக்க அமர்ந்து அதனைக் கேட்டுக் கொண்டிருந்தான்; இவ்வாறாக, கண்ணகியும் வாயிலையடைந்து காவலாளனை நோக்கி, தெளிந்த அறிவும் புண்ணியமுமின்மையான் நீதியிற் பிழைத்த மன்னன் வாயிலைக் காக்குங் காவலனே! "கணவனையிழந்தா ளொருத்தி ஒற்றைச் சிலம்பைக் கையி லேந்தி வாயிற் கடையில் வந்தனள்" என்று அறி விப்பாய்! என்றனள் காவலாளனும் அரசன் சமுகத்தையடைந்து வணங்கி

வாழியெங் கொற்கை வேந்தே! வாழி
தென்னம் பொருப்பிற்றலைவ! வாழி
செழிய! வாழி தென்னவ! வாழி
பழியொடு படராப்பஞ்சவ! வாழி

என்றுரைத்துப் பின்னர்க் கூறுவான்:— அரண்மனை வாயிலில் ஒரு பெண் சிலம்பேந்தியகையுடன் நிற்கின்றாள்; கணவனை யிழந்தவ ளென்று கூறுகின்றாள்; அவள் மயிடன் தலையைப்பீட மாகக் கொண்ட கொற்றவையு மல்லள்; சிவபிரானை ஆடல் கண்ட காளியு மல்லள்; அடங்காச் சீற்றமும் ஆறாத் துன்பமு முடையளாகக் காணப்படுகின்றாள்; எனத்

தெரிவித்தான். அரசன் "அவளை இவ்விடம் அழைக்க" என்றான்; காவலாளன் கண்ணகியை உள்ளே போக விடுத்தான்; சென்ற கண்ணகி மன்னவன் முன்னர்ப் போய் நின்றாள்; அரசன், "மடக் கொடியே! அழுதகண்ணீருடன் என் முன் வந்த நீ யார்?" என்றான். கண்ணகி தெளிந்த அறிவில்லாத காவல! யான், "தன்னை அடைக்கலமாக அடைந்த சிறுபுறாவின் உயிரைக் காத்தற் பொருட்டுத் தன துடம்பை யரிந்து கொடுத்த சிபிச்சக் கரவர்த்தியும், தன் மகனேறிச் சென்ற தேர்ச்சக்கரத்திலகப்பட்டு உயிரிழந்த பசுங் கன்றினுயிரை மீட்டுக் கொடுக்கமுடியாமையால், கன்றிழந்த தாய்ப் பசுவின் துயரையானடைவே னென்று உளத்தே கொண்டு தன் குலத்துக் கொரு மகனைத் தேர்ச்சக்கரத்தின் கீழ் வைத்துத் தேரை நடத்திய மனு நீதி கண்ட சோழனுமாகிய இப்பெரியோர்களால் ஆளப்பட்ட சோழவள நாட்டினள். பழிப்பற்ற புகழ் சான்ற மாசாத்து வான் மருகி; சிலம்பினை விற்றுப் பொருள் தேட வந்து நின்னாற் கொல்லப்பட்ட கோவலன் மனைவி; கண்ணகி யென்பது என் பெயர்" என்று சொல்லிக், காவல! நீ முறை தவறி என் கணவனைக் கொன்றது என்? என்றாள். அரசன் அது கேட்டு, கள்வனைக்கோறல் எப்படி முறை தவறியதாகும் எனக், கண்ணகி, அரசே! நீ நன்கு விசாரியாது செய்தனை; நீதியைப் பற்றாது அநீதியைப்பற்றினை; நீ செய்தது பிழையென்று காட்டினால் என் கணவனுயிரை மீட்டுத்தர வல்லையோ? எனது காற்சிலம்பின் பரல் மாணிக்கம்; என்றாள். எனலும் பாண்டியன்; இது மிகவும் பொருத்த முடையதே; என்சிலம்பின் பரல் முத்துக்களன்றோ? என்று, உடனே காவலாளர் கொணர்ந்த சிலம்பை வருவித்து எதிரே வைத்தான்; கண்ணகி அதனை உடைத்தாள்; உள்ளே இருந்த மாணிக்கப்பரல் தெரித்தது; கண்டான் காவலன்! அந்தோ! என் நினைந் தென்செய்தேன்! என்றான்; வழிவழியாகப் பழியென்பதை யறியாத

பாண்டியர் குலத்திற்குத் தீராப்பழிவிளைத்தேனே; வஞ்சகப் பொற்கொல்லன் வார்த்தையைச் சிந்தையிற் கொண்டேனே; இத்தகைய இழிதொழிலைச் செய்தயானோ அரசன்; யானே கள்வனென்று அரியணையில் மயங்கி வீழ்ந்தான்.

"பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட, யானோவரசன் யானே கள்வன், மன்பதை காக்குந் தென்புலக்காவல், என் முதற் பிழைத்தது கெடுக என் ஆயுள்" என்று அரியணையிற் சாயும் பொழுதே ஆருயிர் நீத்தான். அவ்வளவிற் கோப் பெருந்தேவி குலை குலைந்து நடுநடுங்கி தந்தை முதலியோரை இழப்பினும் அம்முறையின் மற்றவர்களைக் கொள்ளலாம்; கணவனை இழந்தோர்க்கு வேறு கதியாது? என்று சொல்லிக் கண்ணகியின் இரண்டு பாதங்களையும் பற்றிக்கொண்டு தொழுதாள்.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றானக் காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

---

12 கண்ணகி வஞ்சினம் உரைத்தது,

கண்ணகி அவளை நோக்கிக், "கோவேந்தன் தேவி! மிகுந்த தீவினையாட்டியாகிய யான், ஒன்றுமறியாத் தன்மையேனாயினும், முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையுமென்னும் மூதுரை பொய்க்குமோ! யானோ கற்பிற் சிறந்த பெண்மணிகள் பலர் பிறந்து பெரும் புகழ்கொண்ட காவிரி நாட்டினள்; அவர்

களிற் சிலர் வரலாற்றை உரைக்கின்றேன் கேள்*:—ஒருமாத ராள் வன்னிமரமும், மடைப்பள்ளியுஞ்சான்ருக அழைத்த வள்; மன்னன் கரிகால்வளவனுடைய மகள் ஆதிமந்தி யென்ப வள் தன்கணவனைக் காவிரிநீர் கொண்டு போகக் கடற்கரை யடைந்து, அழைத்து மீண்டும் அக்கணவனைப்பெற்றவள்; மற்ருெருத்தி திரவியந் தேடத் திரைகடல் மீது சென்ற காத லன் வருமளவும் கல்லுருவாக இருந்து, கணவன் வந்தபின் தன் உண்மையுருவம் பெற்றவள்; வேருெரு பெண்மணி தனது சக்களத்தியின் மகவு கிணற்றில் விழக்கண்டுத், தன் மகவையுங்கிணற்றிற் போட்டு மீளவும் இரண்டு மகவையும் உயிருடன் பெற்றவள். இன்னுமோர் பெண்மணி தன் கண

---

*பட்டினத்துப் பிள்ளையார் புராணம் பூம்புகார்ச் சருக்கம்:—

கரிகாலன் பெருவளவன் மகள் கேள்வன் கடல்புக்கான்
திருவேயோ வெனவழைத்துத் திரைக்கரத்தாற் றரக் கொண்டாள்
வரைகேள்வன் கலநோக்கி வருமளவுங் கல்லானுள்
புரைதீரப் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

வன்னிமடைப் பளியோடு சான்ருக வரவழைத்தாள்
பன்னியகா விரிமணல்வாய்ப் பாவையை நின்கேள்வனெனுங்
கன்னியர்களொடும் போகாள் திரைகரையாவகை காத்தாள்
பொன்னனையாள் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே.

கூவலிற்போய் மாற்ருன் குழவிவிழத் தன்குழவி
ஆவலின்வீழ்த் தேற்றெடுத்தாள் அயல் நோக்கம் வேறென்று
மேவினுள் குரங்குமுகம் வீடுடையோன் வரவிடுத்தாள்
பூவின்மேற் பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே

முற்ருத முலையிருவர் முத்துவண்ட லயர் விடத்துப்
பெற்ருற்ரு மாண்பெண் பிறர்மணஞ் செய்யாவண்ணஞ்
சொற்ருர்கள் பிறந்தபெண் நாயகனைத் தலைசுமந்தாள்
பொற்ருலி பிறந்தபதி பூம்புகார்ப் பட்டினமே:—இப்பாடல் களாற் புகார் நகாத்துக் கற்புடைய மாதர் இயல்பினைக் காணலாம்,

வன் வெளிதேசஞ் சென்ற காலத்தில் அயலானொருவன்,தன்னை உற்று நோக்கியதறிந்து, கணவன் வருமளவுங் குரங்கு முக மாக இருந்து, வந்தபின் தன் முகம்பெற்றவள்; வேறொரு பெண்மணி, தன்தாய் இளமையில் தோழியுடன் விளையாடுங் காலத்து, எனக்கொரு மகளும் உனக்கொரு மகனும் பிறந் தால் என் பெண்ணை உன்மகனுக்குக் கொடுப்பேன் என்று சொன்னாள்; அவ்விதமே குழந்தைகள் பிறந்து மணப்பருவ மடையத்தோழி தன் மகனுக்குப் பெண்தரும்படி கேட்டாள்; அவள் தான் இளமையிற் பேதைமையாற் கூறியதைத் தன் கணவனிட முரைத்து விசனமுற்றாள்; அதைக்கண்டு தன் தாய் மொழி பழுதாகாமல் தோழியின் மகனை மணந்து கொண்டவள்; இவர் போற்பலர் இன்னும் உளர். அத்தகைய சிறப்புற்ற பத்தினிமார்களோடு ஒத்த கற்புடையாள் யானாகில், இவ்வரசனோடேமையாது இம்மதுரையையும் எரித்து விடுகின் றேன்பார்'' எனவெஞ்சின முரைத்து வெளிப்போந்தாள். கோப் பெருந்தேவியும் நாயகனைத்தழுவி உயிர்துறந்தனள். அப் பாற் கண்ணகி, "நான் மாடக்கூடல் மகளிரே! மைந்தர்களே! மாதவர்களே! தெய்வங்களே! கேளுங்கள்; யான் ஒருசிறிதுங் தவறில்லாதவள்; இவ்வாறிருக்கும்போது என்கணவனைக்கள்வ னென்று தவறிழைத்த இந்நகர் எரிந்தழிக'' என்று சொல்லித் தனது இடதுமார்பைத் திருகி விண்ணகத்தே எரிந்தனள்; அப்பொழுதே வன்னிவானவன் கண்ணகிமுன் வந்து, ''மாபத் தினி! நினக்குத்தீமை செய்தநாளில் இந்நகரை அழிப்பதாக முன்னமே ஓரேவல் பெற்றளேன்; நான் எரிக்கும் போது உய்பவர் யாவரேனும் உளரோ; உளராயின் இன்னே அறிவிப் பாயாக'' என்றான். கண்ணகியும்

பார்ப்பா ரறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்

தீத்திறத்தார் பக்கமே சேர்க, என்றனள்.

அங்ஙனமே அவர்களொழித் தொழிந்த இடமெல்லாம் நெருப்புப் பற்றியது.

---

13 மதுரை எரியால் அழிதல்

மதுரை நகரைக்காக்கும் வருண பூதங்கள் நான்கும், அரசன் கோல் கோடியகாலத்து அந்நகரந் தீயாலழியு மென்பதை முன்னமே யறிந்தனவாகலின் அவை அந்நகரை விட்டு அகன்றன. அரசுகட்டிலில் மன்னனுந் தேவியுந் துஞ்சியதையறியாத அமைச்சர் முதலியோர் ஓவியம் போலசைவற்று நின்றனர். வாள்வீரரும், பாகரும் அரண்மனையில் தீப்பற்றியதறிந்து விரைந்தோடி வந்து தங்களரசனைக் கட்டிலோடு தூக்கிச் சென்றனர். அந்தணர் முதலிய நான்குவகுப்பினர் வீதிகளும் கலக்கமுற்றன. தீயானது கண்ணகியின் ஆணைப்படியே அறவோர் வாழிடங்களைப் பற்றாமல் மறவோர் வாழிடங்களையே பற்றி எரித்தது; கூலவாணிகர் வீதியுங் குலைந்தது; நெடுந்தேர் வீதியும் நிலை யழிந்தது; களிறுகளும், பிடிகளும், பரிகளும் நகர் மதிலைக்கடந்து புறம் போயின; துயில் கொண்ட மகளிரும் ஆடவர்களும் நிலையின்றி எழுந்தோடினார்கள்; பத்தினிப் பெண்டிர்கள் மனம் மகிழ்ந்தனர். முறை தவறிய தென்னவன் நகர்க்கு இக்கேடு தக்கதே என்றனர்; அரங்கத்திலாடிய நாடகக்கணிகையர், பாடகர் முதலியோர் அரங்கத்தினீங்கி வெளியே வந்து, இந்நகரடைந்து தன் கணவனை யிழந்து, தெளிந்தறியுந் தன்மை யில்லாத பாண்டியனைச் சிலம்பால் வென்று, இந்நகரையும் தீயாலழித்த இம் மங்கை எந்நாட்டினளோ! யார்மகளோ! என்று புகழ்ந்துரைத்தார்கள்.

திருக்கோயில்களில் திருவிழாக்கள் ஒழிந்தன; அந்தணர் மறையொலியு மகன்றது; வீடுகளில் விளக்கேற்றுதலுந் தவிர்ந்தது; முரசினொலியும் அவிந்தது; அம்மதுரைமா நகரம் அடைந்த நிலை அளவிடற்பால தன்று; மாபத்தினியும் பெருமூச்செறிந்து கொண்டு, ஓரிடத்தும் நிற்காமல் தியங்கித் தியங்கிப் பலவிடங்களிலுஞ் சுற்றிக்கொண்டே யிருந்தாள்.

---

14 மதுராபதித் தெய்வம் கண்ணகிக்கு உற்ற துரைத்தல்.

இத்தகைக் கொடுந்துயருற்ற மாபத்தினிக்கு முன்மதுராபதித் தெய்வம் வந்து, தான் அப்பாண்டியர் குல முதல்வியாகலின், அவளுக்கு முன்வர அச்சமுற்றவளாய்ப் பின்னே தொடர்ந்து வந்து, மாபத்தினி! நினக்கொன்று கூறவிருப்புகின்றேன் என்றனள் என்றகாலை கண்ணகி திரும்பிப்பார்த்து நீயார்? என்னைத்தொடர்ந்து வருதல் எற்றுக்கு? எனது கொடுந்துயரினை நீ நன்கறிவாயோ? என்றனள். அதற்கு, மதுராபதி, யானறிவேன்! நின்கணவன் இறந்ததுபற்றியான் மிகுந்த கவலையடைகின்றேன்; அணியிழையே! யான் இந்நகரைக் காக்கும் மதுராபதித் தெய்வம்; இந்நகரைக் காக்கும் பாண்டியர்கள் செங்கோல் வழுவாதவர்களே; எப்படியெனில்,

முன்னொருநாள் இந்நகரில் வாழ்ந்தவனான கீரந்தை என்னும் ஓரந்தணன் தன்மனைவியைப் பிரிந்து காசிக்குச் செல்லும்போது அவள் தனியாயிருக்கவேண்டுமென்பதை நினைந்து வருந்த, அந்தணன், அரசன்செங்கோல் நின்னைக் காக்குமென்று சொல்லிப் போயினன்; அந்மொழி நகர் சோதனைக்கு வந்த மன்னவன் செவிப்புக் கமையால் அவன் அவளுக்கு ஓர்

இடையூறும் வராமற் காத்து வந்தான். அந்தணனும் யாத்திரை முடித்துத் தன் வீடு வந்து சேர்ந்தான். அன்றிரவு வழக்கம் போல நகர் சோதனை வருங்காலத்து அரசன் அவ்வீட்டை அணுக, உள்ளே வேறு குரல் கேட்டுக் கதவைத் தட்டினன். அந்தணன் ஐயமுற்று, யார்? எனக்கேட்க, அரசன் உள்ளிருப்பவன் அந்தணனே யென்றறிந்து அவன் ஐயம் நீங்கும்படிப் பல வீட்டுக்கதவுகளையுந் தட்டிக் கொண்டே போய்விட்டான்; மறநாட் காலையில் அவ்வீதியிலுள்ளார் யாவருங்கூடிவந்து அரசனிடம் முறையிட, "அங்ஙனஞ் செய்தது இக்கையே" என்று வாளால் தன்கையைக் குறைத்துக் கொண்டான். பின்னர்ப் பொன்னாற் கை செய்து பொருத்தினார்கள். அவனுக்குப் பொற்கைப் பாண்டியன், என்று பெயர் வழங்கிற்று. இன்னுங் கூறுவேன் கேள்:—

சோழவள நாட்டிற் பராசரன் என்னும் பெயருடைய பார்ப்பானொருவன் இருந்தான்; அவன் நான்மறையும், ஆறங்கமும், அறுபத்து நான்கு கலைகளும் ஐயந்திரிபற ஓதியுணர்ந்தவன். அவன் ஒருகாலத்திற் சேரநாடடைந்து அந்நாளிற் சேரநாட்டை யாண்ட, சேரன் மாந்தரஞ் சேரலிரும்பொறையின் அவைக்களத்திற் சென்று அவ்வரசனால் நன்கு மதிக்கப்பெற்று, அங்கு வந்த பண்டிதர்களெல்லாரையும் வென்று, பலபரிசுகளும், பொன்மாலை மணிமாலைகளும் பெற்றுத் திரும்பிவருங்கால் பாண்டிய நாட்டிலுள்ள திருத்தங்கால் என்னும் ஊரையடைந்து ஒரு பொதுவிடத்தில் தங்கி இளைப்பாறி யிருந்தான்.

அப்பொழுது அவ்வூரிலுள்ள வேதமோதும் மறைக்குலச் சிறுவரெல்லாம் அவனைச் சூழ்ந்து நின்றனர். பராசரன் அவர்களை நோக்கி "உங்களில் யாவரேனும் நான் சொல்லும்

வேதத்தை முறையுடன் ஓதுவீர்களாயின் அவர்கட்கு இம் மூட்டையைப் பரிசாகக் கொடுப்பேன்" என்றான். சில இளை ஞர் தெரியாது விழித்தனர்; பின் அவ்வூரிலுள்ள வார்த்திகன் என்னும் பார்ப்பனனுடைய மகனாகிய தக்ஷிணாமூர்த்தி என் பான், சந்தம் வழுவாது அவ்வேதங்களைச் சொல்ல, பராசரன் அம் மூட்டையை அவனுக்குப் பரிசாகக்கொடுத்துப் போய் விட்டான். அதுகண்டு பொறாமையுற்ற சிலர் வார்த்திகன் களவு செய்தானென்று பொய்க் குற்றஞ்சாட்டி ஊர்க்காவலா ளரைக்கொண்டு சிறைப்படுத்தினார்கள். வார்த்திகன்மனைவி கார்த்திகை யென்பவள் தன் கணவனுக்கு அநியாயமாக நேர்ந்த தண்டனையைப்பற்றி, "இது முறையோ" எனத் தரை யில் விழுந்து புரண்டு அழுதாள். அநீதிநடந்தமையால் அன்று துர்க்கையின் கோயில் திறக்க முடியாமற் போயிற்று; இந்நிகழ்ச்சியை அரசனறிந்து, அமைச்சர்களே! நமது துர்க் கையின் கோயில் திறக்கப்படாமையின் ஏதோ அநீதி நடந்த தெனத் தோன்றுகிறது; அதனை விசாரித்தறிக என்றனன். அவர்களும் நன்கு விசாரித்து வார்த்திகனைச் சிறைப்படுத்தி யதை யறிந்து அரசன் முன் கொண்டுவந்து நிறுத்தினர்; காவலாளர் உண்மை யுரைத்தனர். அரசன் அந்தணனை மன்னிக்கும் படியாக வேண்டிக்கொண்டு அப்பரிசிற் பொருளை அவனுக்குக் கொடுத்து, அவன் வாழும் திருத்தங்காலென்னும் ஊரையும் இறையிலியாகக் கொடுத்தான்; அப்பொழுதே துர்க்கை யின் கோயிலும் ஊரார் கேட்கப் பேரொலியோடு திறந்து கொண்டது; இவ்விதமாக நீதி செலுத்தும் பாண்டியர்கள் வாழும் நாடு இத்தென்னாடாகும்; இந்நெடுஞ்செழியனும் அத் தன்மையனே; ஆயினும் நின் கணவன் இறந்தகாரணமும் உரைப்பேன் கேள்:—

ஆடித்திங்கட் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத் தட்டமி ஞான்று

வெள்ளி வாரத் தொள்ளெரியுண்ண
உரைசால் மதுரையோடரசு கேடுறும்

எனமுன்னமே ஒருரையும் வழங்கி வந்தமையான், அதற்கேற்ப இன்று இந்நிகழ்ச்சி யெய்தியது. அன்றியும் முன்னர்க் கலிங்க நாட்டிலுள்ள சிங்கபுரத்தை அரசாண்டு கொண்டிருந்த வசு என்பவனும், கபிலபுரத்தை யாண்டு கொண்டிருந்த குமரன் என்பவனும் தாயாதிகளானமையால் தமக்குட் பகையுடையவராகவே வாழ்ந்து வந்தனர்; அவ் விரண்டு அரசர்கட்கும் அடிக்கடிபோர் நிகழ்தலும் உண்டு; அக்காலத்தில் கபிலபுரத்திலுள்ள சங்கமன் என்னும் பெய ருடைய வாணிகன், ஒருவன் தன் மனைவியையும் அழைத்துக் கொண்டு மாறுவேடம்பூண்டு தன்னுடைய அணிகலன்களை யெல்லாம் விற்றுப் பொருளீட்டுதற்காகச் சிங்கபுரத்தை யடைந்து கடைவீதி வழியே சென்று கொண்டிருந்தான்; அப்பொழுது சிங்கபுரத்தரசனாகிய வசுவென்பவனுடைய தூதனாகிய பரதன் எனபவன் அச்சங்கமனை அரசனிடங் காட்டி இவன் பகைபரசனுடைய தூதனென்று சொல்லிக் கொலை செய்வித்தான். அதனையறிந்த சங்கமன்மனைவி அத் துயரம் பொறுளாய், பதினன்கு நாள் பலவிடங்களிலும் அலைந்து திரிந்து முடிவில் ஒருமலையின்மேலேறிக் கீழே விழுந்து உயிர் விடத்துணிந்தாள்; அப்பொழுது அவள் "என்னை இவ்வாறு துன்பப்படுத்தினோர் மறுமையில் இத்துன் பத்தை அடைவாராக" எனச் சொல்லிக்கொண்டே மலையின் மேலிருந்து கீழேவிழுந்து உயிர் துறந்தாள். அக்கற்புடைய மாதின் சாபம் பெற்ற பரதனே இப்பிறப்பிற் கோவலனாகப் பிறந்தான்; அதனால் இத் துன்பமெய்தினன்;

"உம்மை வினைவந் துருத்த காலைச்
செம்மை யிலோர்க்குச் செய்தவமுதவாது"

என்பது பெரியோர் துணிபன்றோ; நீயும் இன்று பதினான்காம் நாள் பகலவன் மறையும் வேளையில் தெய்வ வடிவத்துடன் வரும் நின் கணவனைக் கண்டு, தேவர்கள் எதிர்கொள்ள விண்ணுலகம் புகுவாய் என்றுரைத்து அத்தெய்வம் நீங்கியது.

மதுராபதித் தெய்வம் உரைத்த மொழிகளால் ஒருவாறு ஆறுதலடைந்து, "இனி என் கணவனைக் கண்டு சேரும் வரையில் ஓரிடத்திலும் நிலைத்திருக்காமற் பலவிடங்களிலும் அலைந்து திரிவேன்" எனத் தனக்குள் முடிவு செய்துகொண்டு, அந்நகர்க் கொற்றவை கோயிலையடைந்து, தன் கைவளையை யுடைத்தெறிந்து விட்டுக் "கீழ்த் திசைவாயிற் கணவனொடு புகுந்தேன் மேற்றிசை வாயில் வறியேன் பெயர்"கெனச் சொல்லிக்கொண்டே, மதுரைமா நகரத்தின் மேற்றிசைவாயிலைக் கடந்து, வைகையாற்றின் கரைவழியாகவே, இரவென்றும் பகலென்றும் பாராமல், ஊணும் உறக்கமுமின்றிச் சென்று பதினான்கு நாளுங் கழித்தனள். அப்பால் அப்பதினான்காம் நாள் பகல் சென்ற மாலைக்காலத்தில் சேரநாட்டுத் திருச்செங்குன்றென்னும் மலைமேலேறி ஒரு வேங்கைமர நிழலில் கணவன் வரவை நோக்கிக் காத்திருந்தாள்.

மதுரைக்காண்டம் முற்றிற்று.

வஞ்சிக்காண்டம்.

---

1. கண்ணகி கணவனைக் கண்டு விண்ணுலகம் போதல்.

தெய்வந் தொழா அள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க் கணியாய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து.

திருச்செங்குன் றென்னும் மலைச்சாரலில் வாழும் வேட்டுவமகளிர், மலையிலிருந்து வீழ்கின்ற அருவியில் நீராடிக் கிளிகளையுங் குருவிகளையுந் துரத்திக்கொண்டு கூட்டமாகச் சுற்றி வந்தார்கள்; அப்பொழுது அம்மலையின் மீதுள்ள வேங்கை மர நிழலில் நிற்கின்ற மாபத்தினியைக் கண்டு, "அன்னையே! மன நடுக்கத்துடன் ஒருகொங்கையிழந்து இங்கு நிற்கின்ற நீர் எங்கள் குல முதல்வியாகிய வள்ளியைப்போல் தோன்றுகின்றீரே? யாரென்றறிய விரும்புகின்றோம்" எனப்பணிந்து வேண்டினார்கள்; கண்ணகிதேவி அவ்வேட்டுவமகளிரைப் பார்த்து, "ஊழ்வலியாற் புகார் நகரினீங்கி, மதுரையடைந்து, கணவனை யிழந்து, மதுரை மன்னனும், மதுராபுரியும் அழிந்தொழிய அந்நகர் நீங்கி வந்த தீவினையேன்யான்" என்றாள். இம்மொழிகளைக் கேட்ட வேட்டுவமகளிர் வணங்கிக் கைகுவித்து நின்றார்கள். அப்பொழுதே விண்ணவர் சிலர் அவ்விடம் வந்து மலர்மாரி சொரிந்து, கண்ணகிக்கு அவள்

தொழுநனைக்காட்டி, அவளையும் விமானத்திமேலேற்றி வான்வழி யே சென்றனர். கண்ட வேட்டுவமகளிர் பெருவியப் பெய்தித் தங்கள் சுற்றத்தவரை நோக்கி, "சிறு குடியீரே! சிறு குடியீரே! இன்று யாங்கள் காண வேங்கைமர நீழலிலிருந்து, விண்ணுல கஞ் சென்ற இப்பத்தினிக்கடவுளல்லது, வேறு தெய்வத்தை எங்கண்ணுற் கண்டிலேம்; ஆகலின் இத்தெய்வத்தையே நங் குல தெய்வமாகக் கொண்டு போற்றுவீராக; தொண்டகப் பறை சாற்றுமின்; சிறுபறை கொட்டுமின்; கொம்பினை ஊது மின்; இவை போன்ற பிற வாத்தியங்களையும் முழக்குமின்; குறிஞ்சிப் பண்ணைப்பாடுமின்; நறும்புகையெடுமின்; மலர் தூவி நமது பல்வளம் பெருக, என்று வாழ்த்துமின்" என்றனர்.

பின்னர் அக்குறிஞ்சி நிலமக்களனைவருந்திரண்டு, தாங் கள் வழிவழியாகப் பரவும் முருகக்கடவுளையும், அவர் திருக் கையிலேந்திய வேலையும்,

குறமகள் அவளெம குலமகள் அவளொடு
அறுமுக ஒருவ! நின் அடியிணை தொழுதேம்
துறைமிசை நினது இரு திருவடி தொடுநர்
பெறுக நன் மணம்விடு பிழைமணம் எனவே, எனவும்
சீர்கெழு செந்திலுஞ் செங்கோடும் வெண்குன்றும்
ஏரகமு நீங்கா இறைவன்கை வேலன்றே!
பாரிரும் பெளவத்தி னுள்புக்குப் பண்டொருநாள்
சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே!

எனவும் பாடிக்கொண்டாடினார்கள். பின்னர்க் கண்ணகி யைக் குறித்து,

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்

கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை யேத்திநாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே

எனவும், பாடித் துதித்துக் குரவைக்கூத்தாடி முடித்தனர்.

2, சேரன் செங்குட்டுவன் மலைவளங் காணச் செங்குன்றடைதல்.

அக்காலத்து அச்சேரநாட்டினையாண்ட முடியுடை வேந்தனாகிய செங்குட்டுவன், மலைவளங் காணும் விருப்பமுடையவனாய்த் தன் தலைநகராகிய வஞ்சி நகரினின்றும் நால்வகைச் சேனைகளும் புடைசூழத் தன் தேவி வேண்மாளுடனும் தம்பி இளங்கோவடிகளுடனும் புறப்பட்டுக், கோங்கம், வேங்கை, கொன்றைமுதலிய மலர்கள் பூத்து அணிபெறத்திகழுங் கரைகளையுடைய பேரியாற்றை யடைந்து ஆங்கொரு மணற்குன்றில் தங்கியிருந்தான். அப்பொழுது அம்மலையின் மேலுண்டான குரவைக்கூத்தினொலியும், குறமகளிர் பாட்டொலியும், வெறியாடும் வேலன் கைகொட்டும் ஓசையும், தினைகளைக்குற்றும் போது பாடும் வள்ளைப்பாட்டினொலியும், குறவர்கள் கள்ளுண்டு களித்துப் பாடு மொலியும், வேட்டஞ் செய்வோர் முழக்கமும், யானைமுதலிய விலங்குகளினோசையும், எங்கும் பேரொலியாய் முழங்கின. மன்னன் சேனையும் அவற்றிற்கு மாறாக முழங்கின. சேனை முழக்கங் கேட்ட வேடர்கள், தங்கள் மன்னன் மலைவளங்காண வந்து, பேரியாற்று மணல் திட்டில் தங்கியிருப்பதை யறிந்து, எல்லோருங் கூடி, யானைக்கோடும், அகிற் கட்டையும், வெண்சாமரையும், மதுக்குடமும், சந்தனக்குறையும், சிந்தூரக் கட்டியும், அரி

தாரமும், ஏலமும், மிளகும், தெங்கின் பழமும், தேமாங்கனியும், பலவின் பழமும், கரும்பும், கமுகந்தாறும், வாழைத்தாறும், முதலிய பலபொருள்களையும், புலிக்குட்டியும், யானைக்கன்றும் சிங்கக்குட்டியும், மான்மறியும், நகுலமும், மயிலும், முதலியவற்றையும் காணிக்கையாகக் கொண்டு அரசன் சமுகத்தை யடைந்து, தாங் கொணர்ந்தவற்றை அவனெதிரில் வைத்து வணங்கினார்கள். பின் "மன்னவ! வாழ்க; இம்மலையில் இன்று ஓர் புதுமை கண்டோம்" என்றார்கள். அரசன் அஃதியாதெனக், கூறுவார் வேடர்கள்.

மன்னர் மன்ன! இம்மலையினிடத்துள்ள வேங்கை மர நீழலில் திருமடந்தை போன்ற ஒருபெண் தன் ஒரு முலையிழந்தவளாய்த் துன்ப மிக்க முகத்துடன் நின்று கொண்டிருந்தாள். சிலதேவர்கள் விமானத்தில் வந்து, மலர் மழை பொழிந்து, அவள் கணவனை அவளுக்குக்காட்டி விமானத்திலேற்றிக்கொண்டு துறக்கம் புக்கனர். அவள் எந்நாட்டினளோ? யார்மகளோ? அறியோம்; இதுவரையில் இத்தகையபுதுமையைக் கண்டறியோம்; என்றனர். அப்பொழுது சேரன் செங்குட்டுவனைக் காணுதற்குப் பாண்டியநாட்டிலிருந்து வந்த தமிழ்ப்பெரும் புலவராகிய கூலவாணிகன் சாத்தனார், அரசே! அதனையானறிவேனென்றுரைப்பார்:—"சோழவளநாட்டுப் புகார் நகரத்து வணிகர் தலைவனாகிய மாசாத்துவான் மகன் கோவலன், அந்நகரத்து மாநாய்கன்மகள் கண்ணகியை மணந்து இல்லறத்தை இனிது நடத்து நாளில் அவ்வூரில் மாதவியென்னும் நாடகக்கணிகையை விரும்பி, அதனால் தன் பொருள் முழுதுந் தோற்று, அம்மாதவியைப் பிரிந்து, மனைவியுடன் மதுரையை யடைந்து ஊழ்வினை வலியால் சிலம்பு விற்கப் போனகாலத்து மன்னனாற்கள்வனென்று கருதிக் கொலைசெய்யப்பட்டான்; அதனையறிந்த கண்ணகி அரசனிடம்

தன் கணவன் கள்வனல்லனென்று புலப்படுத்த, அம்மன்னன் தன் செங்கோல் வழுவியதே என்றேங்கி, சிம்மாசனத்தில் வீழ்ந்து உயிர் துறந்தான்; பாண்டிமாதேவியும் நாயகன் பிரிவாற்றாது உயிர் துறந்தனள்; அப்பாற் கண்ணகி சினந்து மதுரையையழித்து, இவ்விடம் போந்தனள்; அக்கற்பரசியே இன்று இவர்கள் வேங்கைமர நீழலிற் கண்ட பெண்மணி" என்று மொழிந்தனர். கேட்ட செங்குட்டுவன் பாண்டியன் தன் செங்கோல் வழுவியதை யாமெல்லாமறியு முன்னரே உயிர் துறந்தானாகலின், மிகவும் புகழத்தக்கவனே! என்றுரைத்துத் தன் தேவியைப்பார்த்தான். அவள் பாண்டிமாதேவியின் கற்பினைப் புகழ்ந்து, பின் நமது நாடடைந்து விண்ணுலகம் புக்க இம்மாபத்தினியை நாம் குலதெய்வமாகக் கொண்டு போற்றல் கடமையாகும், என்றனள். அரசனும் அதற்கிசைந்து உடனிருந்த மந்திரக்கிழவரை நோக்க, அவர்களில் ஒரு மந்திரி அரசன் எண்ணத்தையறிந்து, "மன்னவ! பத்தினித் தெய்வமாகிய கண்ணகிக்கு ஆலயங்கட்டி அதில் அத்தெய்வத்தைப் பிரதிட்டைசெய்து வழிபடுதல் சாலச்சிறந்ததே; அப்பத்தினிக் கடவுளின் சிலை செய்தற்குப் பொதியமலையிலாயினும், இமயமலையிலாயினும் கல்கொண்டு வருதல் வேண்டும்; பொதியமலையிற் கல்லெடுப்பின், காவிரியாற்றில் நீர்ப்படைசெய்தல் வேண்டும்; இமயமலையிற் கல்லெடுப்பின் கங்கையில் நீர்ப்படை செய்தல்வேண்டும்" என்றான்.

செங்குட்டுவன் அமைச்சர்களை நோக்கி, வன்மை மிக்க எங்கள் சேரர் மரபிற்குப் பொதியமலைக்கற் கொணர்ந்து காவிரியில் நீர்ப்படை செய்தல் ஏற்றதன்று; பத்தினிக்கடவுளின் சிலை செய்தற்கு இமயமலைக் கல்லைக் கொணர்ந்து கங்கையில் நீர்ப்படை செய்வதே தகுந்ததென்றான். அம்மொழிகேட்ட

வில்லவன் கோதை யென்னும் மந்திரி "மன்னர் மன்ன நின் கொற்றம் வாழ்க; முன்னர்த் தமிழ் மன்னராகிய சோழ பாண்டியர்களை எதிர்த்தபோதும், கொங்கணர், கருநாடர், பங்களர், கங்கர் முதலிய அரசர்களை வென்ற காலத்தும், நினது போர்த்திறனையும், பகைவர் படைமீது நீயானையைச் செலுத்திய ஆற்றலையும் நேரிற்கண்டேனாகலின், வட நாட்டிற்குச் சென்றால நின்னை எதிர்த்துப் போர்புரிய வல்லாரில ரென்றே கருதுகின்றேன்; ஒருசிலர் எதிர்ப்பினும் நினது பேராற்றலுக்கு முன் அவர் திறமைபாதாகும்; நீ வடதிசைச் செல்வதை அந்நாட்டரசர்கட்கு முன்னமே ஓலையெழுதியறிவிக்க வேண்டும்" என்றான். அதனைக்கேட்ட அழும்பில் வேள் என்னும் மந்திரி எழுந்து, மன்னவ! எல்லா நாட்டரசர்களின் ஒற்றுவர்களும், நமது வஞ்சி நகரிற் கூடியிருக்கின்றார்களாகலின், நமது நகரிற் பறையறைந்து தெரிவிப்போமாயின், அவர்களே தங்கள் நாட்டுவேந்தர்களுக்குத் தெரிவித்துக் கொள்வார்கள் என்றான்.

செங்குட்டுவனும் அது நன்றென்றே கொண்டு அதற்கிசைந்தான். பறையறைவோன் யானைமீது முரசினை ஏற்றி, "சேரன் பல்லாண்டு வாழ்க அவன் செங்கோல் எங்கும் பரவுக; குடிகள் இன்புற்று வாழ்க; நமது மன்னன் பத்தினிக்கடவுட்குச் சிலை செய்வான் கல் கொணர இமய நோக்கிச் செல்கின்றான் எல்லா அரசர்களும் அவரவர் கட்டவேண்டிய திறைப் பொருளுடன் எதிர் கொள்வார்களாக; அல்லது நாட்டைத் துறந்து மாறுவேடம் பூண்டு வனத்திற்றிரிவாராக; அல்லது கடல்புக் கொளிப்பாராக" என்று கூறிப் பறைசாற்றினான்.

3 சேரன் வஞ்சின முரைத்தல்.

அப்பால் சேரன், அரிமாசுமந்த அமளியில் இருந்தான்; மந்திரிகளும், சேனைத்தலைவரும், ஆசிரியரும், கணிதநூற் புலவரும் அரசனைச்சூழ அமர்ந்தனர் பின்னர்ச் செங்குட்டுவன் சேனைத்தலைவனை நோக்கி, "இமயமலையினின்றுங் குமரிக்கு நீராட வந்த சில முனிவர்கள், வடநாட்டு ஆரியமன்னராகிய கனகனும் விசயனும் தமிழ்வேந்தரை மதியாது பழித்துப் பேசினரென்றுரைத்தனர். அங்ஙனம் இகழ்ந்துபேசிய அவர்களைத் தண்டியாதொழியின் அது தமிழ் வேந்தர் மூவர்க்கும் பழிப்பைத் தருவதாகும்; ஆகலின் நான் சென்று கொணரும் அச்சிலையை அவ்வடநாட்டு வேந்தர் தலையில் ஏற்றிக்கொண்டு வருவேன்; அது செய்யேனாயின் போர்முகத்து எதிர்த்த பகைமன்னரை நடுங்கச் செய்யுமாற்றலின்றித் தனது குடிகளை நடுங்கச் செய்யுங் கொடுங் கோலரசனாவேன்" என்றான். உடனே புரோகிதன், "அரசே! அவ்வாரியமன்னர் சோழனையும், பாண்டியனையும் இகழ்வரேயன்றி நின்னை இகழமாட்டார்கள்; நினது திறமையை அவர்கள் நன்கறிவார்கள்; நினது சினந்தணிக" என்றான்.

அப்பொழுது, அச்சபையிலிருந்த ஓர் கணித நூற்புலவன் "அரசே! இப்பொழுது நடக்கும் முகூர்த்தம் எல்லா அரசர்களும் நின்னடி பணியத்தக்க காலம்; ஆகலின் இப்பொழுதே புறப்படுக" என்றான். வேந்தனும் அப்பொழுதே "நமது வாளுங்குடையும் வட திசை நோக்கி எழும்புக, என்றான், எனலும் சேனைத்தலைவர் முதலியோர் பட்டத்துயானையை அலங்கரித்து, அதன்மேல் வாளையுங் குடையையும் ஏற்றிக் கொண்டு நகர்ப்புறத்தே சென்று தங்கினர்கள். அரசனும் அன்று தனது படைத்தலைவருக்கு விருந்து செய்தான்.

மற்றை நாள் அரண் மனையிற் காலை முரசம் ஒலித்தது; அரசனும் உடனே எழுந்து தனது நித்தியக்கடன்களை முடித்துக்கொண்டு, தான் வழிபடு கடவுளாகிய சிவபெருமானைத் துதித்து, அந்தணர் வேள்விச்சாலையை வணங்கி யானைமீதேறினன்; அப்பொழுதுசிலர், திருவனந்தபுரத்துத்திருமாலைப் பூசித்த நிர்மாலியமும் மாலையுங் கொண்டு வந்து கொடுத்தனர்; சிவபெருமான் திருவடியை முன்னமே சென்னியிலணிந் தனனாகலின், அவற்றைத் தோளின்மேலணிந்து புறப்பட்டான்.

4, சேரன் நீலகிரியடைந்து தங்குதல்.

வாகை தும்பை மணித்தோட்டுப் போந்தையோ
டோடை யானையி னுபர்முகத் தோங்க
வெண்குடை நீழலெம் வெள்வளை கவர்ந்து
கண்களி கொள்ளுங் காட்சியை யாகென
மாகதப் புலவரும் வைதாளிகரும்
சூதரு நல்வலந் தோன்ற வாழ்த்த
யானை வீரரு மிவுளித் தலைவரும்
வாய்வாண் மறவரும் வாள்வல னேத்தத்
தானவர் தம்மேற் றம்பதி நீங்கும்
வானவன் போல வஞ்சியை நீங்கித்
தண்டலைத் தலைவருந் தலைத்தார்ச் சேனையும்
வெண்டலைப் புணரியின் விளிம்புசூழ் போத
மலைமுதுகு நெளிய நிலநாடதர்பட
உலக மன்னவ னொருங்குடன் சென்றுங்
காலும் புரவி யணித்தேர்த் தானையொடு

நீலகிரியை யடைந்து தங்கினன், செங்குட்டுவன்.

அக்காலத்து வான் வழிச்சென்ற முனிவர் சிலர் சேனை முழக்கங்கேட்டு ஒளி பொருந்திய மேனியுடன் மன்னவன் முன்னர்த் தோன்றினர். அரசனும் எழுந்து அவர்களை வணங்கினன். முனிவர் ஆசி கூறி "அரசே! யாங்கள் பொதிய மலைக்குச் செல்லுகின்றோம்; நீ இமயமலைக்குச் செல்லுகின்றாய்; அங்கு அருமறையுணர்ந்த அந்தணர் சிலர் வசிக்கின்றனர்; அவர்களைப் பாதுகாத்தல் நினது கடன்" என்று சொல்லிச் சென்றனர்.

அப்பால், கொங்கணரும், கருநாடரும், செங்குட்டுவன் முன் வந்து, ஆடல் பாடல் முதலியவற்றான் அவனை மகிழ்வித்துப் பரிசில் பெற்றுச் சென்றனர். பின்னர்ச்சேரனுடைய நண்பராகிய நூற்றுவர் கன்னருடைய தூதர்களைவனாகிய சஞ்சயன் அரசனையடைந்து, "வேந்தே! உனது நண்பராகிய, நூற்றுவர்கன்னர், நூறு தேர்களும், ஐந்நூறு யானைகளும் பதினாயிரம் குதிரைகளும், பல வகைப்பொருள் நிறைந்த இருபதினாயிரம் பண்டிகளும், திறையாகக் கொடுக்க என்னுடன் அனுப்பினார்கள்; மேலும், நீ இமயமலைக்குச் சேறல் ஒருகல் கொண்டு வருதற்காயின் அதனைத் தாங்களே சென்று கொணர்ந்து கங்கையில் நீர்ப்படை செய்து தருவதாகவுந் தெரிவிக்கச் சொன்னார்கள்" என்றான். செங்குட்டுவன் அதனைக்கேட்டு "சஞ்சய! ஆரிய மன்னராகிய கனகவிசயர்கள் தமிழ்நாட்டு வேந்தர்களை இகழ்ந்து பேசியதாகக்கேட்டு அவர் மேற் சீற்றங்கொண்டு செல்கின்றது நமது சேனை; நீ நமது நண்பர் நூற்றுவர் கன்னரிடம் கங்கை கடத்தற்கு ஓடம் சித்தப் படுத்துமாறு நாம் கூறியதாக அறிவிப்பாய்" என்றுரைத்து அவனை அனுப்பினன். பின்பு, தென்னவர் தூதன் கொண்டு வந்த சந்தனத்தையும் முத்துக்களையும் ஏற்று மகிழ்ந்தான்.

சேரன் செங்குட்டுவன் தனது நால்வகைப் படைகளும் புடைசூழ, நீலகிரியினின்றும் புறப்பட்டு, வடதிசை நோக்கிச் சென்றான்.

---

5. சேரன் வடநாடு செல்லல்.

அப்பால் பலநாடுகளையுங் கடந்து கங்கைக்கரையை யடைந்து, நூற்றுவர் கன்னரால் சித்தஞ் செய்துவைக்கப் பட்ட ஓடங்களின் மூலமாய்க் கங்கையைக் கடந்து, வடகரை சென்றான்; அங்கு எதிர் கொண்ட கன்னர்களைக் கண்டு மகிழ்ந்து, பின் ஆரிய நாடடைந்தான்; அவ்விடந் தங்கிய தமிழரசனாகிய செங்குட்டுவன் வரவையறிந்த ஆரியமன்னர்களாகிய கனக விசயர்கள் பொறாமைகொண்டு உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் முதலிய மன்னர்களுடைய உதவியாற் கடல்போன்ற சேனைகளுடன் செங்குட்டுவனை எதிர்த்தார்கள். எதிர்த்த சில பொழுதைக்குள் சேரனும், அவன் படைகளும், யானைக்கூட்டங்களினிடையிற் புக்க சிங்கங்கள் போல, பகைவர் சேனையுட்புக்கு அவை கலக்கமுறச் செய்தன. ஆரியப்படைகள் நாற்புறமுஞ் சிதறியோடின. இறந்தவர் போக எஞ்சியவர்களெல்லாம் உருமாறி ஓட்டம் பிடித்தனர். கனகவிசயரும் சில வீரர்களும் சிறையாகப் பிடிக்கப்பட்டனர். இங்ஙனம் பதினெட்டு நாழிகையளவிற் போர் முடித்து சேரன் படைகள் வெற்றிச்சங்கு முழக்கின. அதன் பிறகு நீலகிரியில் முனிவர்கள் அந்தணர்களைக் காக்குமாறு கூறிய மொழி நினைவுக்குவர, வில்லவன் கோதை யென்னு மந்திரியை அனுப்பிவிட்டு, இமய மலையை யடைந்து கல்லெடுத்து கைத்தொழில் வல்ல சிற்பிகளால் பத்தினிக் கடவுட் சிலை செய்வித்து, அதனைக்

கனகவிசயர்கள் முடிமேலேற்றிக் கொணர்ந்து கங்கையில் நீர்ப் படை செய்வித்தான். அப்பால் ஓடமேறித் தென்கரை சேர்ந்து, அவ்விடத்து ஆரியமன்னரால் உண்டாக்கப்பட்ட பாசறையில் சேனைகளுடன் தங்கினன். பின்னர்த் தமது சேனைத் தலைவர்க்கும், போர் வீரர்க்குஞ் சருந்த பரிசளித்து இன்னுரை கூறினன்.

---

6. மாடலன் செங்குட்டுவனைக் காணல்.

அக்காலத்துத் தென்றிசையினின்றுங் கங்கை நீராடச் சென்றிருந்த மாடலன் என்னும் மறையவன், ஆண்டடைந்து சேரனைக் கண்டான். கண்டு

"வாழ்க எங்கோ! மாதவி மடந்தை
கானற்பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது" என்றான். வேந்தனும்,
பகைப்புலத் தரசர் பலரீங் கறியா
நகைத்திறங் கூறினை நான்மறையாள!
யாது நீ கூறிய உரைப்பொருள், என்றான். எனலும்

மாடலன் கூறுவான்:—"கோவலன் மாதவியுடன் இந்திரவிழா முடியுநாளிற்கடற்கரைப் புன்னைமர நீழலில் தங்கியிருக்குங் கால், மாதவிபாடிய பாடல்களால் ஊடல் கொண்டு அவளைப் பிரிந்து, ஊழ்வினை துரப்பத் தன்மனையாளுடன் மதுரையடைந்து அரசனாற் கொல்லப்பட்டான். அஃதறிந்த அவன் மனைவி கண்ணகி, மன்னவனிடம் வழக்குரைத்தனள்; பாண்டியன் தன்பிழையறிந்து அப்பொழுதே உயிர் துறந்தான். பின்னருங் கண்ணகி சினந்து மதுரைநகரத்தை எரியாலழித்து

னின்றுடனடந்தாள்; பின்னின்றெடும் போந்து இன்று இக் சனகவிசயர் முடிக்கு அணியாகத் திகழ்ந்தனள்; இப்பொரு ளெலா மடக்கியே அவ்வாறுரைத்தேன்" என்றான். மீண்டும் மாடலன் அரசனை நோக்கி, யான் பொதியமலையை வலம் வந்து மீண்டு வருங்காலத்தில் பாண்டிநாட்டு மதுரையம் பதியின் மதிற்புறத்ததாகிய முனிவரிருக்கையிற் றங்கினேன். அப் பொழுது கோவலன் வெட்டுண்டதும், பாண்டியன் இறந்ததும் கண்ணகியால் மதுரையழிந்ததும், மாதரி தான் அடைக்கல மாகப் பெற்ற மக்களை இழந்த துன்பத்தை ஆற்றாது தீயிற் குளித்ததும், கவுந்தியடிகளும் உண்ணாநோன்பு கொண்டுயிர் துறந்ததும், அறிந்து புகார்நகரம் புகுந்து என் நண்பர்களுடன் மதுரைச் செய்தியைப் பேசிக்கொண்டிருந்தேன்; அதுநகர முழுவதும் பரவவே, அதனைக்கேட்ட கோவலன் தாயும், கண்ணகியின் தாயும் உயிர் துறந்தனர். மாசாத்துவானும், மாநாய்கனும் தம்பொருள்களெல்லாவற்றையுந் தானஞ் செய்து துறவு பூண்டனர். மாதவியும் ஆடையணிகலன்களைக் களைந்து பௌத்தபிக்குணியாயினள்; மாதவிமகள் மணிமே கலையுந் தவக்கோலம் புனைந்தாள்; இந்நிகழ்ச்சிகளை யறிந்த யான், என்மொழியாற் சிலர் இறந்தனரே யென்று விசனமுற்று அப்பாவந் தொலையக் கங்கையாடப் போந்தேன்; அதனால் இங்கு உன்னைக் கண்டேன்; என்றான். பின்னர்ச் செங்குட்டு வன் மறையவனை நோக்கி நெடுஞ்செழியன் இறந்தபின் மதுரை யின் நிலையாது? என்றான். அதற்கு மாடலன் அரசே! கொற் கையிலிருந்த வெற்றிவேற் செழியன் கண்ணகிதேவிக்கு ஆயி ரம் பொற்கொல்லரைப் பலி கொடுத்து அரியாசனத்திலிருந்து அரசு புரிகின்றான், என்றான். அக்காலத்தில் வெய்யவன் மேல்கடலில் மறைந்தான். ஒரு கணித நூற்புலவன் அரச னிடஞ் சென்று வேந்தர் வேந்தே! இன்றோடு நாம் வஞ்சியை

நீங்கி முப்பத்திரண்டு திங்களாயின என்றான். வேந்தன் அத னைக் கேட்டு மீண்டும் மாடலனை அழைத்துத் தன்மைத்துனன் கிள்ளி வளவனுடைய நலங்களையும் விசாரித்தறிந்து, அவ னுக்கு ஐம்பது துலாம் பாரம் பொன்னைப் பரிசாக அளித்தான்

7, சேரன் வஞ்சி நகரடைதல்,

பின்னர் அரசன் நூற்றுவர் கன்னரை யழைத்து, இன் மொழி புகன்று விடை கொடுத்து நீலன், மாடலன் என்னும் மறையவர்களையும்,, ஐந்நூறு தூதர்களையும் அழைத்துக் கனக விசயர்களைத் தமிழ் நாட்டு வேந்தர்கட்குக் காட்டி வரும்படி அனுப்பி, அன்றிரவு பள்ளிகொண்டான். மற்றைநாட் காலை யில் அங்குநின்றும் புறப்பட்டுத் தன்தேவி மகிழவும், வெற்றி முரசும், வெற்றிச் சங்கும் முழங்கவும், வஞ்சி நகரமக்கள் மகிழ்ந்தெதிர் கொள்ளவும் தன் நகரடைந்தான். சேனைத் தலைவர் முதலியோர் தங்கள் தங்கள் உறவினர் மகிழத் தம் இருப்பிடம் புக்கனர். மன்னவன் அரண்மனையில் வீற்றிருந் தான்.

இவ்வாறிருக்க, நீலன், மாடலன் என்னும் மறையவர் இருவரும் சேரனவைக்கள மடைந்து, "அரசே! நீ கட்டளை யிட்டவாறே கனக விசயரைக் கொண்டு, சோழனிடஞ் சென் றோம். சோழன் அவ்வாரிய மன்னரைக் கண்டு, போர்முனை யிற் குடையும், வாளுமிழந்து தவக்கோலங் கொண்டோடிய மன்னவர்களைச் சிறைசெய்தல் தகுந்த காரியமன்றென்றான். அதன் பிறகு அவர்களை அழைத்துப் பாண்டியனிடஞ் சென் றோம். அவனும், போர்க்களத்தைப் பகைவரிடம் ஒப்புவித்

திப் புறங்காட்டி யோடிய மன்னவரிடத்து வஞ்சி வேந்தன் கொண்ட சீற்றம் புதுமையாக இருக்கின்றதென்றான்" என்று அறிவித்தனர்.

இம்மொழிகளைக் கேட்ட செங்குட்டுவன் உள்ளத்திற் கோபம் பொங்கியெழுந்தது; கண்கள் சிவந்தன; அக்குறிப்பை யுணர்ந்த மாடலன் எழுந்து, "வேந்தர் வேந்தே! சீற்றந் தணிக! உலகெலாம் போற்றும் ஒரு பேரரச! நீ இவ்வரசியல் மேற்கொண்டு ஐம்பது ஆண்டுகள் கழிந்தன; அந்நாள் முதல் இந்நாள் காறும் மறக்கள வேள்வியே புரிகின்றாய்; அறக்கள வேள்வி யாதும் புரிந்திலை; உனக்குமுன் இந்நாட்டை யாண்ட மன்னவர்கள் இப்பொழுது எங்கே? அதனால் இவ்வுடல் நிலையற்றதென்பதை நீ நன்கறிவாய்; நின்னாற் சிறைபாக்கப்பட்ட இவ்வாரிய மன்னவர்களைக் காணின், பொருள் நிலைபற்றதென்பதனையும் அறிவாய்; நினது நரை முதிர் யாக்கையால் இளமை நிலையாமையும் அறிவாய்; ஆகலின் இனி நீ போரினை யொழித்து அறவேள்வி புரிதல்வேண்டும்; அதுவும் இன்றே செய்ய வேண்டும்; நாளைச் செய்வோமெனின், அதுவரையில் நம்முடலில் உயிர் நிலைத்திருக்குமென்பதுந் துணிந்துரைக்கக் கூடியதன்று; உலகத்தில் தமது வாழ்நாளை அளவுபடுத்தி யறிந்து வாழ்வார் ஒருவருமிலர்; இப்பிறப்பில் உயர் பிறப்பெய்தியவன் மறுமையில் இழிபிறப் பெய்தலும், இழிபிறப் பெய்தியவன் உயர்பிறப் பெய்தலும் உலக இயற்கை. எல்லாம் அவரவர் முன்செய்வினை வழி நிகழ்வனவாம். இவற்றை யெல்லாம் உன்னிடம் பரிசுபெறும் பொருட்டு உரைத்தேனல்லேன்; உலகத்திற்பிறந்திறக்கும் ஏனைய மக்கள் போலன்றி நீ பேரின்பப் பெருவாழ் வெய்திச் சிறப்புற வேண்டுமென்ற நன்னோக்கத்துடன் மொழிந்தேன்" என்றான். அந்நல்லுரைகளைக் கேட்ட

வேந்தன் சீற்றந் தணிந்து சிந்தைமகிழ்ந்து, சிறைபாக்கப்பட்ட கனகவிசயரை விடுவித்து, அவர்கள் தான் செய்யும வேள்வி முடியும் வரையில் இங்கிருந்து பின் தங்கள் நகரஞ் செல்லலா மென்று சொல்லித் தன் மந்திரி வில்லவன் கோதையை யழைத்து அவ்வாரிய மன்னர்க்கு வேண்டியவற்றை அளித்துக் காத்திடுக என்றான் தன்நகரிற் சிறைப்பட்டவர்களையும் விடுதலை செய்தான் அப்பால், ஆசான், அந்தணர், கணிதர், முதலியோரை அழைத்து முறைப்படிக் கண்ணகிக்குக் கோயில் கட்டுவித்து, இமயத்தினின்றுங் கொணர்ந்த பத்தினிக் கடவுட் சிலையைப்பிர திட்டை பண்ணிப் பெருவிழாக் கொண்டாடினன்.

---

8 தேவந்தி கண்ணகி கோயிலடைதல்

கோவலன் கொலையுண்டதை மாடலனலறிந்த அவன் தந்தை மாசாத்துவான் துறவு பூண்டமையாலும், அவன் தாய் பெருமனைக்கிழத்தி உயிர் துறந்ததனாலும், கோவலன் செவிலித்தாயும் அடித் தோழியும், கண்ணகியின் தோழியாகிய தேவந்தியும் கூடி வருத்தமுற்று, கண்ணகியைக் காணவிரும்பி மதுரையை நோக்கிச் சென்றார்கள். சென்று பார்க்க பாண்டியன் இறந்ததும், மதுரை அழிந்ததும், மாதரி தீப்புகுந்ததும் கவுந்தியடிகள் உண்ணா நோன்பு கொண்டுயிர் துறந்ததும் கண்டு, பின்னும் அதிக விசனத்தை யடைந்து மாதரிமகள் ஐயையும் உடன்வர, வைகையாற்றின் கரைவழியாக மேற்றிசை நோக்கிச் சென்று திருச்செங்குன் றென்னு மலையின் மேலேறிக் கண்ணகி கோயிலைக்கண்டு வணங்கினார்கள்; பிறகு அங்கே அத்தெய்வத்தைப் பிரதிட்டை செய்த சேரன் செங்குட்டுவன் நிற்கக்கண்டு அவனிடந் தங்கள் வரலாறும், புகார்

நகரமிலையும் விளங்க உரைத்தனர்; அதன் பிறகு அரசன் தேவந்தியை நோக்கி மகிழ்ச்சியடைந்து பின்னுஞ் சில வினவத் தொடங்கினன். இதற் கிடையே பத்தினித்தெய்வம், சிறந்த அணிகலன்களுடன் மின்னற் கொடிபோல விண்ணகத்தே தோன்றிக் காட்சி தந்தது. மன்னவன்

என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமேகலை வளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடி பொன்றா மீவிசும்பிற் றோன்றுமால்,
எனவியந்து நின்றான். அவ்வளவிற் பத்தினித்தெய்வம்
தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்
நல்விருந் தாயினன் நானவன் றன்மகள்
வெல்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடுந் தோழிமீர் எல்லீரும்வம் மெல்லாம்,

எனமொழிந்தது. இவ்வாக்கினைக் கேட்டோரனை வரும் மாபத்தினியைத் தொழுது, அப்பால் தமிழ் வேந்தர் மூவரை யும் புகழ்ந்து கொண்டாடினார்கள். அவ்வளவில், விண்ணகத் தே தோன்றிய கண்ணகித் தெய்வம், "செங்குட்டுவ! நீ நீடூழி வாழ்க" என்றுரைத்து மறைந்தது. அதற்குப் பிறகு செங் குட்டுவன் தேவந்தியைப்பார்த்து மணிமேகலையின் வரலாற் றை விசாரித்தறிந்தான்.

---

9 தேவந்தி ஆவேச முறுதல்.

அப்பொழுது பாசண்டச்சாத்தன் தேவந்திமேல் ஆவேச மாயினன்; அதனால் அவள் கூந்தலவிழக், கண்கள் சிவக்கக்

கைகளை உயர்த்துக் கால் பெயர்த்தாடினாள்; அச்சாத்தன் அங்குநின்ற மாடலனை நோக்கி "வேதிய! நான் பாசண்டச்சாத்தன்; இத்தேவந்தி மீது ஆவேசமாயினேன்; நான் முன்னொருநாள் கொடுத்த உன்கையிலுள்ள கமண்டல நீரை, இங்குள்ள அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்கள் மீதும் அநந்தபுரத்துச் சேடக் குடும்பியின் மகள்மீதுந் தெளிப்பாய்; அந்நீர் இம்மலையிலுள்ள ஓர் சுனைநீர்; அதில் நீராடியவர்கள் பழம் பிறப்பை அறிவார்கள்" என்றான். மாடலன் வியப்புற்று அவ்விதமே கமண்டல நீரைத் தெளித்தான். உடனே அரட்டன் செட்டியின் இரண்டு பெண்களும் தாங்கள் முற்பிறப்பில் கோவலன் தாயும், கண்ணகியின் தாயும் என்பதையறிந்து புலம்பினார்கள். சேடக்குடும்பியின் மகளும் தான் முற்பிறப்பில் மாதரியென்பதை யறிந்து புலம்பினாள். அனைவரும் வியந்தனர். பின்னர்ச் சாத்தன் செங்குட்டுவனை நோக்கி,

நீ ஆனே றூர்ந்தோ னருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவ னாகலிற்
செய்தவப் பயன்களுஞ் சிறந்தோர் படிவமுங்
கையகத் தனபோற் கண்டனை யன்றே
ஊழிதோ றூழி யுலகங்காத்து

நீடுவாழியரோ! என்றுரைத்து மறைந்தான். அப்பால் வஞ்சி வேந்தன் கண்ணகி கோயிலுக்குப் பூசையும் விழாவும் குறைவின்றி நடக்க ஏற்பாடு செய்து, தேவந்தியைப் பூசை புரிய நியமித்து, வேண்டிய நிலங்களை இனமாகவிட்டு வேள்விச் சாலை யடைந்தான். அக்காலத்து அங்கிருந்த ஆரிய மன்னரும், மாளுவ வேந்தரும், கொங்க நாட்டரசரும், இலங்கை யரசனாகிய கயவாகுவும், பத்தினித்தெய்வத்தை நோக்கித்

தாம்! நீ எங்கள் நாட்டிற்கும் எழுந்தருளி எங்கள் வழிபாட்டையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; என வேண்டத் "தந்தேன்" என்றோர் அசரீரி தோன்றக் கேட்டு, மகிழ்ந்து செங்குட்டுவனுடன் வேள்விச் சாலை புக்கனர்.

---

10 இளங்கோவடிகள் வரலாறுரைத்தல்.

பின்பு இளங்கோவடிகள், மாபத்தினிக் கோயிலை யடைந்தார். அப்பொழுது பத்தினித்தெய்வம் தேவந்திமேல் ஆவேசமாகி, அடிகளை நோக்கி "நீமுன்னொருநாள் உன் தந்தையுடன் மணிமண்டபத்தில் வீற்றிருந்தாய்; அப்பொழுது ஒரு நிமித்திகன் அவ்விடம் வந்தான்; அவன் உன்னைப்பார்த்து அரசனாதற்குரிய இலக்கணம் உன்னிடம் நிறைந்துள்ளதென்றான்; எனலும் "என் முன்னோன் செங்குட்டுவனிருக்க நீ முறையின்றி இங்ஙனங் கூறினையென வெகுண்டு, அப்பொழுதே குணவாயிற் கோட்டமடைந்து, துறவு பூண்ட கடவுள் நீ' என்று முன் நிகழ்ந்தவற்றை யுரைத்து மேல் நிகழ்வனவற்றையும் உரைத்தது. கண்ணகியைப் பிரதிட்டை செய்த அந்நாள் முதற் சேரநாடு எல்லா வளங்களும் பெற்றுச் சிறந்தது.

---

11 மற்றைய வேந்தரும் மாபத்தினியைப் போற்றல்

கோவலன் இறந்தது முதல் வான்மழை பெய்யாது வளங்குறைந்த பாண்டிநாடு வெற்றிவேற் செழியன் ஆயிரம் பொற்கொல்லரைக் கண்ணகித் தெய்வத்திற்குப் பலியிட்டு விழாக்கொண்டாடியபின் செழிப்புற்று விளங்கியது; இலங்

கைக் கயவாகுவும், கொங்கவேந்தரும், மாளவ வேந்தரும் சோழன் பெருநற்கிள்ளியும் பத்தினிக்கடவுளைத் தத்தம் நாடுகளிற் பிரதிட்டை செய்து வழிபட்டு இனிது வாழ்ந்தனர். நலம் பெருகுக.

முற்றிற்று.

77029

பாரதி அச்சுக்கூடம், லாங்கு பஜார், வேலூர்.

21B
1-43

Published by
THIRUVENGADA
RANGANATHAM & Co.
Book-Sellers & Publishers,
Long Bazaar.
VELLORE.